ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௬௧	கர ஹு புரட்டாசி மீ	பகுதி ௬

பிரார்த்தனை

ஸ்ரீராமகிருஷ்ண நாமாமிருதம்

நூற்றெட்டுத் திருநாமம்

(197-ம் பக்கத் தொடர்ச்சி)

41. சைதன்யர் இருக்கையமர் தகையுணர்ந்த பகவன்தாஸ்
 நைதலின்றிக் கௌராங்க நாமமதை வழங்கிட்டார்.
42. சருவக்ஞர் எனுநாமம் தரப்பெற்றார் சுரேந்திரரால்;
43. வரு பிரம்மா நந்தலயர் மருத்துவர் மஹேந்திரரால்.
44. பண்டிதராம் கௌரியென்பார் பகவதியின் வணங்கண்டு
 மண்டிய சீர் அவை நடுவே மாகாளிப் பெயர் பகர்ந்தார்.
45. இவர் ஒரு பீர் பயகம்பர் என்றனரால் ஒரு முசல் மான்;
 (பீர்-பக்கிரி. பயகம்பர்-தேவதூதராகிய மகம்மத்.)
46. கவர்சிலுவை மீதிலங்கக் கண்ட 'கூக்' கிறிஸ்துருவம்.
 (கூக்-ஒரு கிறிஸ்தவ பக்தரின் பெயர். 'என்றனரால்' எனச் சேர்க்கவும்)
47. சீக்கியராம் சியார்சிப்பாய் செப்பினரால் நானக் என.
48. பாக்கியராம் பவாஹாரி புகர்வர் ஈசா வதார மென.
49. அதமதாரண ரென்றார் அடியாராம் கௌரியம்மை.
50. மதனமோ ஹனகோபீ வல்லவ ரென் பாளொருகால்.
 (அதம தாரணர்-தாழ்ந்தவரைக் காப்போர்.)
51. சால வெண்ணெய் பாலாடை தமைக்கேட்கும் தன்மையினல்
 பாலகோ பால ரென்பார் அகோரமணி தேவியம்மை.
52. ஆடுட கோசுவாமி ஆவரென்பார் நவரஸிகர்.
 (நவரஸிகர்-கர்த்த பஜா வகுப்பைச் சார்ந்த ஒரு தேவி பக்தர்.
 ஆடுட-பற்றற்ற.)
53. ஈடுபடும் தர்பேஷ்ஸாய் இவர் ஆலெக் என்றழைத்தார்.
 (தர்பேஷ ஸாய்-ஸாயி வகுப்பைச் சேர்ந்த மகம்மதிய பக்கிரி.
 ஆலெக்-பிரம்மம்.)

(தொடரும்)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

தியானமும் யோகமும்

உடலையும் மனதையும் பலமாயும் நோயின்றியும் தூய்மையாயும் வைத்திருக்கப் பாடுபடவேண்டும்; ஏனெனில் அவ்வாறு செய்யாதவன் எந்த நல்ல செயலையும் செய்யத் தகுதியுள்ளவனுகான். ஒருவன் தியானம் பண்ணுமுன், தியானத்திற்கு வேண்டிய திறமையைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். திடீரென ஒருவன் தியானம் பழக முடியாது—அது ஒரு மிக மிகக் கடினமான காரியம்.

முதல் முதலாக, பலவகைப்பட்ட பொருள்களினின்றும் மனத்தை இழுத்து, ஒரு குறிப்பிட்ட நினைவில் மனத்தை ஒன்று சேர்த்துச் (சிதறாது) செலுத்த முயலவேண்டும், இதற்குப் 'பிரத்யாஹாரம்' என்று பெயர். இப் பிரத்யாஹாரப் பழக்கம் கைகூடிய பின்பு, ஒருவன் மனத்தை உடலிலுள்ள ஏதேனும் ஒரு புள்ளியில்—உதாரணமாக, மூக்கு நுனியிலோ, புருவ மத்தியிலோ, நெஞ்சிலோ—நிலை நிறுத்துவானுயின், அது 'தாரணை' எனப்படும். (எண்ணெயை ஒரு கலத்தினின்றும் வேறொன்றில் ஊற்றும்போது ஏற்படும்) எண்ணெயின் தாரை போன்று, விண்டு போகாது ஒரே தொடராக நினைவுத்தாரரையையும் ஓடுமாறு செய்ய இயலும்போது, 'தியானம்' எனும் நிலை வந்தடைகிறது. எண்ணெய்த்தாரையை உவமை கூறியதன் கருத்து யாதெனில், உடைந்து தனித்தனித் துளியாகப் போகாது ஒரு கம்பிபோலத் தொடர்ச்சியாயிருத்தல் வேண்டும் என்பதே. நினைவின் தாரை இடைவிடாது தியானத்திற்குரிய பொருளை நோக்கிச் செல்லும்படிச் செய்யவேண்டும். நீண்ட காலம் இவ்வாறு செய்து கொண்டே போக உனக்கு இயலுமாயின், உனது மனத்தின் அடக்கும் சக்தி வளர்ந்து வரும், தியானம் பழகும் திறமை உனக்கு உண்டாகும்.

ஆரம்பத்தில் ஒருவன் ஒரு கட்டிப் பொருளின் மீதுதான்—உதாரணமாக, ஒரு தெய்வத்தின் பிரதிமையின் மீதுதான்—தியானம் பழகவேண்டும். தொடங்கும் போதே முழு விக்கிரகத்தின்மீதும் தியானிப்பது எளிதன்று; ஆதலால், விக்கிரகத்தின் ஒரு குறிப்பிட்ட உறுப்பின் மீது—முகத்தின் மீதோ திருவடியின்மீதோ—தியானம் பழகவேண்டும். இப்பழக்கம் முதிரும்போது, முழு உருவத்தின் மீதும் தியானித்தல் எளிதாகும். இவ்வாறு படிப்படியாக அதை நுண்ணிய (நிராகார) உருவற்ற நிலைமீதுள்ள தியானமாக மாற்ற இயலும். ஆனல் இவ்விஷயத்து ஒருவன் மிக மிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்; ஏனெனில் இந்நிலையில் தியானம் பண்ணும்போது, மனோலயம், மனஞ் சிதறல் போன்ற தடைகள் ஏற்படும். இவ்வாறு நிகழாதபடி தடுக்க ஒருவன் மிக மிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

ஏதேனும் ஒரு விஷயத்தைக் குறித்துச் சிந்தித்து ஒருவன் ஒரு முடிபுக்கு வர முயலும் போதும், மனம் ஒருமுகப்படும்—இதுவும் தியானத்தின் ஒரு பகுதியே யாம். முயற்சி செய்துவரின், ஆழ்ந்த தியான நிலையை அடைதலும் கைகூடும்; இம்மாதிரியான நன்னம்பிக்கை வேண்டும். கீதையின் ஆறும் அத்யாயத்திலே 11-ம் சுலோக முதல் 15-ம் சுலோகம் முடிவுவரையுள்ள ஐந்து சுலோகங்களில் பகவான் அருச்சுனனுக்கு அளித்த உபதேசங்களில், தியானத்தைப் பற்றிய குறிப்புகளை நீ காண்பாய்.

சௌகரியமான சமயங்களில் தினமும் கீதையைக் கற்றல் சித்தசுத்தியை உண்டு பண்ணும். உனது மனதைப் பகவானுடைய திருவடிகளிலே நிலை நாட்டிக் கொண்டு அவரை நோக்கிச் செல்லுக; அதன்பின் ஸம்ஸாரத்தைப் பற்றிய அச்சம் உனக்கு இராது. அவரே உன்னை எப்போதும் காத்துத் தம்மிடம் இழுத்துக் கொள்வார். மனத்திலே பொய்ம்மையில்லையானல், உளமும் வாக்கும் ஒன்றுயிருக்குமாயின், அம் மனத்தைக் காணும் அந்தர்யாமியான பகவான் முமுக்ஷுவுக்கு உண்மையான நன்மையை அளிப்பதைமட்டும் நடக்கும்படி விதிப்பார். எல்லா சாஸ்திரங்களும் ஞானிகளும் ஒரு மனதாகக் கூறும் உபதேசம் இதுவே என்றறிக. தீயாரோடு இணங்காது எப்போதும் விலகியிரு. எப்போதும் பிரார்த்தனையில் தோய்ந்த மனப்பான்மையோடு, உன் மனத்தை அவரது நினைவில் ஆழ்ந்திருக்கும்படி எப்போதும் செய்து வா. இவ்வாறு பழகுவையாயின் உன் நெஞ்ச மலர்மிசை வீற்றிருக்கும் பகவானே உனக்கு எல்லாவற்றையும் விளக்கியருளுவார்.

'நிரோதம்' (யோகம் சித்தவிருத்தி நிரோதம் என்னும் பதஞ்சலியின் யோகசூத்திரத்தில்) என்பதற்குப் பொருளாவது, முற்றும் அடக்குதல் என்பது; அதாவது, மனத்தைப் புறமுகமாகாதவாறு தடுத்தலே, மனத்தைப் புறத்தேயுள்ள பொருள்களோடு இணைந்து ஒன்றுகாதபடி தடுத்தலே சித்த நிரோதம் எனப்படும். மனம் உண்முகப்பட்டுச் செல்

லும் தன்மையதாம்போது, அது அடக்கப்பட்ட நிலையில் உள்ளதாகும். மனத்தில் சற்றேனும் விருத்தி உண்டாகாத நிலையே நிரோதம் என்பது. மனத்தில் விருத்தி அற்றுப் போகும்போது சாக்ஷியாக உள்ள ஆத்மாவே தனது சொரூபத்தோடு விளங்குகிறது.

ஓர் ஊசியின் காது வழியாக ஒரு நூலைச் செலுத்தும்போது நூலை முறுக்கி, அதனைக் கூரியதாகவும் உள்ளே செல்லும்படிக்கும் ஆக்கல் வேண்டும். அதுபோன்று மனத்தின் நுனியைக் கூரியதாக்குதலுக்குப் பெயர் ஒரு நிலைப்படுத்தல் (ஏகாக்ரம்) என்பது; ஒரு நூலிலுள்ள சிறிய இழைகள் நாலாபக்கங்களிலும் நீட்டிக் கொண்டிருக்கும் போது, ஊசியின் காது வழியாக அதனைச் செலுத்த முடியாது; அதுபோன்றே மனதில் ஒரு சிறிது சலிப்பு இருக்குமாயினும், தியானம் முதலியன கைகூட முடியாதனவாம். மனதை அசைவற்றிருக்கச் செய்தலே ஏகாக்ர நிலை (ஒரு முனைப்பட்ட நிலை).

சித்த விருத்திகளை அடக்குதல் மனதை ஒரு வழிப்படுத்துவதனாலே விளைகின்றது. மனதை ஒரு முனைப் படுத்தும் முயற்சியினால் மட்டும் விருத்திகளை அடக்குதல் சாத்தியமாகும். முழு அடக்கம் என்னும் முற்கூறிய நிரோதம் ஏகாக்கிர நிலையே.

விருத்திகளை அடக்கும் வழிகளாவன; அப்பியாசமும் (பழகுதல்) வைராக்கியமும் (பற்றறுத்தலும்). அப்பியாசமாவது, ஒரே நினைவை (பாவனையே) மீண்டும் மீண்டும் மனத்தில் வைத்தலாகும். மனம் எப்போதும் சஞ்சல முடையதாதலின், நிலையாக ஒன்றையே பற்றி நிற்க முடியாதது. முன் நினைத்த நினைவைவிட்டு வேறொன்றுக்கு மனம் தாவாதபடி அடக்கிப் பழைய நினைவுக்கே அதை மறுபடியும் கொணர்ந்து அதிலேயே மனதைச் செலுத்துதலே பழக்கமாகும். இது சம்பந்தமாகக் கீதை (VI-26) பின்வருமாறு கூறுகிறது: 'தியான வேளையில் சஞ்சலமான மனது தியானிக்கும் பொருளைவிட்டு விலகி, நிலைபெறாது உழலும் போது, மறுபடியும் மறுபடியும் அதை அப்பொருட்கே திரும்பக் கொணர்ந்து, ஆத்மாவில் நிலை நாட்டல் வேண்டும்'— இதுதான் அப்பியாசம்.

தியானம் பழகாமலே, நித்ய-அநித்யவஸ்து விவேகம் அப்பியாசம் வைராக்யம் இவற்றால் மட்டும் சித்தவிருத்தி நிரோதம் எனும் நிலையை அடையக் கூடுமா என்று சிலர் கேட்கின்றனர். விவேகம் ஒன்று இருந்தாலே, தியானத்தின் பயனாகிய சித்தவிருத்தி நிரோதம் விளைகின்றது. இதை வேறு வழியாகக் கூறுவோமாயின், சித்த விருத்திகளை ஒழித்தல் எனும் நிலையைத் தியானத்தாலும், அம்மாதிரியே நித்திய அநித்தியப் பொருள்களின் வேறுபாட்டைப் பற்றிய உணர்வினாலும் அடையக்கூடும். விவேகத்தில் ஒருவன் முன்னேறும் போது, விருத்தியொழிதலாகிய நிலை வருகின்றது; அதன்வழியாகப் புத்தி அறுதியான நிலையைப் பெற்று, அந்நிலையில் ஆத்மாவாகிய மெய்ப்பொருளை நேரே காண்கின்றது. இன்னும், தியானத்தாலும் கூட சித்தவிருத்திகளின் ஒழிவு உண்டாகின்றது. படிப்படியாகச் சமாதி நிலை கைகூடுகின்றது. மனம் விகாரமடையாது நின்று விடுகின்றது. பரமாத்மா அப்போது உணரப்படுகிறது.

விவேக மார்க்கம் ஞானிக்காக ஏற்பட்டது; தியான மார்க்கமோ யோகிக்காக உண்டாயது. மார்க்கங்கள் வெவ்வேறாயினும், முடிவிடம் ஒன்றேதான். இரண்டு மார்க்கங்களிற் செல்வோரும் ஆத்மாவை உணர்ந்து, எல்லாத் துயரங்களையும் தாண்டிச் செல்கின்றனர். ஆனால் பக்தனோ அம்மாதிரியான கஷ்டமான உழைப்பு மிகுந்த மார்க்கங்கள் மூலம் செல்லாது தனது நெஞ்சையும் உயிரையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து, தனிப் பிரேமையால் அவரை அடைந்து பாக்கிய முடையோனாகிறான். அவனுக்கு இது அதனினும் எளிதான வழியாகும்.

—சுவாமி துரியாநந்தர்

குருதேவர் உபதேச மணிமாலை

(199-ம் பக்கத் தொடர்ச்சி)

923—சமாதியின் மகிமை

குலவுகற் பூரங் கொளுத்திடின் மிகுதி
கொளச்சிறி திருப்பதின் றாகும்,
நிலவுவி வேக நீங்கிமிக் குயர்ந்த
நிலையெனுஞ் சமாதியைப் பெற்றால்
சுலவு 'நான்' 'நீ' யிவ் 'வுலக 'மென் பன பின்
தோன்றிடா, மனமகங் காரம்
புலமம கார மென்பவை விசுத்தப்
பொருளிலொன் றாய்க்கலந் திடுமே. 184

925—சுத்தமனமும் ஆத்மாவும் ஒன்றே

கட்டுறு முள்ளங் கடவுளை யறியா,
காசறுந் தூய்மன மறியும்,
விட்டொரு கலப்பில் விவேகமேயுள்ளம்,
விவேகமா மனம்பழக் கத்தால்
மட்டறு தூய்மை வாய்த்திடல் வேண்டும்,
மன்னிடும் பற்றறல் வேண்டும்,
தட்டறு பரத்தோ டுள்ளமப் பொழுதே
சார்ந்திடும் மிரண்டறக் கலந்தே. 185

(காசுஅறும்-குற்றமற்ற. கலப்பில்-கலப்பு இல்லாத. மட்டறு-அளவற்ற).

928—விஞ்ஞான நிலை

தாழ்ந்ததோர் சுரத்திற் றொடங்கிடப் பட்டுச்
சார்முறை யுச்சத்திற் பாடித்
தாழ்ந்திடு சுரத்தே முடிபுற விசைகள்
தம்வழி பாடிடப் படுமால்,
ஆழ்ந்திடு சமாதி யதிலிரண் டற்ற
அரும்பரங் காட்சியுற் றொருவன்
வீழ்ந்திடு முலக நிலையினை யெய்தி
வெற்றுயிர் போல்வதிங் கிடுவன். 186

928—இரு நிலைகளும் வேண்டும்

வாழையின் பட்டை முழுதகற் றியபின்
வள்ளிய தண்டினை யடைந்தோன்
காழையுற் றிடுமித் தண்டதே சிறந்து
காண்பதென் றெண்ணினு மாய்ந்து
மாழையார் பட்டை களுஞ்சிறந் தனவே
மரத்தின துறுப்பென வறிவான்,
கூழையற் றிரண்டுஞ் சிறந்தன போன்முன்
கூறிரு நிலைகளும் வேண்டும். 187

933—சித்த புருஷர்களின் வகை

சொப்பன சித்தர் கனவினி லிறைவன்
தூவருள் பெற்றமை வுறுவோர்,
செப்புமந் திரமெய்ச்சித்தர்மந் திரத்தால்
திகழ்பரி பூரண முறுவோர்,
பொற்பட சித்தர் கதுமென வேமெய்ப்
பூரணமுறுபவ ரிங்குத்
தற்பர னருளாற் பக்குவ முறுவோர்
தண்ணருட் சித்தரென்பவரே. 188

(அடசித்தர்-புதையல் எடுத்தல் முதலியவற்றால் ஒருவன் திடீரெனக் செல்வம் பெறுவதுபோல விட்ட குறையால் திடீரெனப் பக்குவ ஞானம் பெறுவோர்; அருட்சித்தர்-கிருபாசித்தர்.)

(தொடரும்)

சிவானந்த வாணி

(ஆர். ராமகிருஷ்ணன் எம். ஏ., எல். டி.)

பேலூர் மடம், 1929, மே, 23, வியாழன்

இன்று வைகாச பூர்ணிமை. புத்த பூர்ணிமையும் ஆகும். பிற்பகல் வேளையில் புத்த தேவருடைய ஜீவியத்தைப் பற்றிய உரைகள் நிகழ்ந்தன. மடத்தைச் சேர்ந்த சாதுக்கள் பலர் சொற்பொழி வாற்றினர். இரவில் புத்த தேவருடைய விக்கிரகத்தை பத்ரம், புஷ்பம், மாலை கொண்டு அலங்கரித்து வைத்து, பஜனை செய்து, பிறகு புத்த பகவானுடைய ஜீவியத்தைப் படித்தனர். சுத்தானந்த சுவாமிகள் வங்காளி பாஷையிலும், சர்வானந்த சுவாமிகள் ஆங்கிலத்திலுமாக புத்த தேவருடைய வாழ்க்கை, அவரது மதம், உபதேசம் இவை சம்பந்தமாகப் பிரசங்கம் புரிந்தனர்.

இரவு போஜனம் முடிந்த பிறகு ஓங்காரானந்த சுவாமிகள் மகாபுருஷ மகாராஜரிடம் வந்து சிறிது உரையாடிய பின், "இன்று சுதினமாகும். நாங்கள் மடத்தில் இந்நாளைக் கொண்டாடினோம். பிற்பகலில் சொற்பொழிவுகள் முதலியன நிகழ்ந்தன" என்று தெரிவித்தார்.

மகாபுருஷர்: ஆம், இன்று சுதினம் தான். மும்முறையில் புனிதமான நாள். சரி. நீங்கள் இந்தப்பாட்டைப் பாடினீர்களா?

சாந்தியை நாடுகின்றேன் நான்,
ஆனால் சாந்தி எங்குள்ளதோ அறிகிலேன்!
எங்கிருந்து நான் வந்துள்ளேனோ,
எங்கு தான் நான் செல்லுவேனோ?

என்ற பாட்டைப் பாடினீர்களா?

ஓங்காரானந்தர்: இல்லை, யாருக்கும் அந்தப் பாட்டு நன்றாகத் தெரியவில்லை.

மகாபுருஷர்: அது மிக மிக நல்ல பாட்டு. கிரிச சந்திர கோஷ் இயற்றிய பாட்டாகும் அது.

இவ்வாறு கூறி, மகாபுருஷரே அந்தப் பாட்டைப் பாடலானார். பிறகு பகர்ந்தார்: "கிரீச பாபு எவ்வளவு நன்றாகப் பாட்டை அமைத்துள்ளார்! அவர் லலித விஸ்தாரம் என்ற நூலிலிருந்து இந்தக் கருத்தை எடுத்துக் கையாண்டு பாட்டை அமைத்தார். அந்தப் புத்தகத்தில் இந்தக் கருத்தானது வெகு

நன்முக விவரிக்கப் பட்டுள்ளது. புத்த தேவர் (அவர் அப்பொழுது சித்தார்த்தர் என்ற இளவரசராக இருந்தார்) தமது மனைவியான கோபா என்ற பெண்ணுடன் இன்பப் பொழுது போக்கி வந்தார். அச்சமயத்தில் ஆகாய மார்க்கத்தில் அப்ஸர கணங்கள் இந்தப் பாட்டை பாடிக்கொண்டு சென்றனர். திடீரென்று இந்த கீதம் காதில் விழவும் புத்த தேவர் திடுக்கிட்டு விழிப்புற்முர், "இந்தப் பாட்டைப் பாடுவது யார்? இந்தப் பாட்டு எனக்கு நன்முகத் தெரியுமே.

சாந்தியை நாடுகின்றேன் நான்

ஆனல் சாந்தி எங்குள்ளதோ அறிகிலேன்!—இது வெகு காலமாக எனக்குத் தெரிந்துள்ள பாட்டாயிற்றே" என்று அவர் கூறலானர். இந்தப் பாட்டைக் கேட்டதும் புத்த தேவருடைய மனப்போக்கு உடனே வேறு வழியில் திரும்பிவிட்டது. அதன் பின்னர் அவருடைய மனம் போகங்களை அனுபவிப்பதில் ஈடுபடவில்லை. உதாசீன நிலைமையில் அவர் எப்பொழுதும் இருக்கலானர். சுத்தோதன மன்னர் (புத்த தேவரின் தந்தை) இவ்விஷயத்தை அறிந்ததும் பல முறைகளைக் கையாண்டு புத்தருடைய மனத்தை மாற்றுவதற்கு வழி செய்து பார்த்தார். பலவிதமான வசிய முறைகளின் மூலமாக அவருடைய உள்ளத்தைப் போகத்தில் திருப்புவதற்கு விருப்பமுற்று முயன்முர். ஆனல் புத்தர் முழு விழிப்புற்றவராக இருந்ததால் இந்த முயற்சிகளெல்லாம் வீணுயின. பிறகு ஒரு நாள் அவர் அரண்மனையை விட்டு வெளியேறினர்.

புத்த தேவருடைய மத்திய நெறியைப் பற்றியும் லலித விஸ்தாரத்தில் கண்டுள்ள கருத்துக்களைக் கையாண்டு கிரீச பாபு பாட்டு ஒன்றை இயற்றினர்.

"தந்திகள் பலவற்றைக் கொண்டு நன்கு கட்டப்பட்ட என் அழகிய வீணை, வித்துவானுடைய ஸ்பரிசத்திற்கு இணங்க இனிய துவனிகளை எழுப்பும். அளவுக்கு மீறியோ குறைந்தோ இல்லாமல் அது சரியானபடி மீட்டப்பட்டால், அதனின்றும் இனிய கீதங்கள் நூற்றுக்கணக்காக எழும். தந்திகள் முறுக்கு இன்றி இருப்பின் அவை பேசா, கீதமும் கிளம்பாது. முறுக்கு அதிகமாகப் போய்விட்டாலோ தந்திகள் அறுபடும், பாட்டு நின்று போகும்".

அப்பொழுதெல்லாம் எங்களிடையே என்ன தியாகம், என்ன வைராக்கியம், என்ன தபஸ் இருந்தன, தெரியுமா? இறைவன் பூமியின் கண் அவதாரம் செய்யும் பொழுது ஆத்மீய வெள்ளப் பெருக்கு ஒன்று ஏற்படுகிறது. அப்பொழுது பல மாந்தர் ஞான ஒளிபெற்று தன்யர்கள் ஆகின்றனர். பலர் முத்தி யடைகின்றனர்.

ஓங்காரானந்தர்: பரேசநாத மலையில் சுமார் இருபத்தைந்து துறவியர் சித்தி பெற்றனர். அவர்களுள் 15, 16 பேர்கள் ஜைன பிக்ஷுக்கள் ஆவர். எஞ்சியவர் பௌத்த பிக்ஷுக்கள்.

மகாபுருஷர்: ஒரு சமயத்தில் நாங்களும் கூட பௌத்த தர்மத்தைப் பற்றிச் சிந்தித்தும் ஆராய்ந்தும் வந்தோம். அது வெகு காலத்திற்கு முந்தி நடைபெற்ற சம்பவமாகும். அப்பொழுது விவேகானந்த சுவாமிகள் முதலான நாங்கள் அனைவரும் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருடன் காசிப் பூர்த்தோட்டத்தில் வசித்து வந்தோம். விவேகானந்த சுவாமிகள் நன்முகப் படித்திருந்தார். நாங்களும் கொஞ்சம் கொஞ்சம் படித்திருந்தோம். எங்களுக்குள் பலத்த விவாதங்கள் எழும். அப்பொழுது, ஈச்வரன் இருக்கிருர் என்பதை நாங்கள் கொஞ்சமும் நம்பவில்லை. எங்களிடம் இருந்த இந்த மனப்போக்கைக் கண்ட பக்தர்கள் சிலர் வெகு வருத்த முற்றனர். விவேகானந்த சுவாமிகள் தாமாக அதிகமொன்றும் சொல்லமாட்டார், ஆனல் என்னை ஏவி விடுவார், நான் என் வாதத்தை பலமான முறையில் எடுத்துரைப்பேன். விவேகானந்தர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்து சந்தோஷமடைவார். சிற்சில சமயங்களில் நான் இவ்வாறு கூடக் கூறுவேன்; சரீர உணர்ச்சியைப் பெற்றிருப்பது ஒரு கேடு ஆகும், ஏனெனில் தியானத்திற்கு அது தடையாகின்றது; அவ்வாறே ஈச்வர சிந்தை என்பதும் கூட மனத்தை நிர்விஷயமாக்குவதற்குத் தடையாகின்றது என்று பகருவேன். வாயினல் மட்டும் இவ்வாறு நாங்கள் பேசினேம் என்று எண்ணக்கூடாது. அச்சமயத்தில் எங்களுடைய சிந்தனையும் கூட இதே போக்கில் தான் சென்றது. எங்கள் அனுபவங்களெல்லாம் இந்தப் போக்கிலேயே அமைந்தன. அப்பொழுது வேறு எந்த பாவனையையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. அந்த ஒரே போக்கினில் நாங்கள் அவ்வளவு மூழ்கிக்கிடந்தோம். பிறகு பக்தர்கள் சிலர் இவ்விஷயத்தை இராமகிருஷ்ணரிடம் தெரிவித்தனர். அதைக் கேட்ட குருதேவர், "அவர்கள் கூறுவதும் மிக சரிதான். சாதனையில் ஒரு குறிப்பிட்ட

நிலை உண்டு, அந்நிலையில் சாதகன் பகவான் இருப்பதாகவே கொள்ளுவதில்லை'' என்று பதில் கூறினார்.

இந்த மனப்போக்கு எங்களிடம் நீண்ட காலம் நிலைத்திருந்தது. குருதேவர் உடலை உகுத்த பிறகு நாங்கள் வராக நகர் மடத்தில் வசித்து வந்த பொழுதும் கூட இந்த மனப் போக்கு தொடர்ந்து இருந்து வந்தது. அப் பொழுதும் பகவானது இருப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு நாள் குருதேவர் என் முன் தோன்றி, ''சரி, குருவே எல்லாமும் ஆவார். குருவைக் காட்டிலும் மேலானது ஒன்று இல்லை'' என்று கூறினார். இந்தச் சொற்களைக் கேட்டதுமே என் மனத்தில் இருந்து வந்த பாவனையெல்லாம் என்னை விட்டகன்றது. பிறகு ஒரு பொழுதும் அத்தகைய பாவனையே உள்ளத்தில் எழவில்லை. குருதேவர் யுகாவதார புருஷர் அல்லவா? யுக தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு தோன்றினவர் அல்லவா? குறுகிய அல்லது ஒரு சார்புடைய மனோபாவனை எங்கள் உள்ளத்தில் இருக்குமாறு அவர் செய்வாரா?

ஓங்காரானந்தர்: குருதேவர் உயிர் வாழ்ந்த பொழுது நீங்கள் ஒரு சமயம் அவருக்குத் தெரிவிக்காமலேயே புத்த கயைக்குச் சென்றுவிட்டீர்கள் அல்லவா?

மகாபுருஷர்: ஆம். விவேகானந்த சுவாமிகளுடன் கூடச்சென்று விட்டோம். புத்த கயை சென்று அங்கு போதி மரத்தின் அடியில் நாங்கள் தியானத்தில் அமர்ந்தோம். தியானத்தில் நன்ருக ஆழ்ந்து விட்டோம். திடீரென்று விவேகானந்த சுவாமிகள் திவ்விய பாவனை நிலையில் இருந்து கொண்டு கண்ணீர் பெருகியவராய், எழுந்திருந்து என்னை ஆலிங்கனம் செய்து கொண்டார். நான் அவருக்கு அருகிலேயே அமர்ந்திருந்தேன். பிறகு அவர் சாதாரண நிலைக்கு வந்தார். மீண்டும் ஆழ்ந்த தியானத்தில் லயித்து விட்டார். மறு நாள் பேச்சினிடையில் நான் இதைப் பற்றி அவரைக் கேட்டேன். அவர் அதற்கு விடையாக, ''எனக்கு உள்ளத்தில் ஆழ்ந்த வேதனையொன்று ஏற்பட்டது. இங்குள்ள எல்லா விஷயங்களும் முன்போலவே தான் உள்ளன. இங்கு புத்த கயையில் புத்த தேவருடைய கருத்துக்கள் திரண்டு இருந்து வருகின்றன. அவருடைய தியாகமும் வைராக்கியமும் விசேஷ கருணையும் ஆழ்ந்த அத்யாத்மிக வியல்பும்—எல்லாம் இன்னமும் உள்ளன. ஆனால் அவர் எங்கே? இந்த எல்லா இயல்புகளும் திரண்டு உருவான புத்த மூர்த்தி எங்கே? புத்த தேவர் இல்லாத காரணத்தால் மனத்தில் ஏற்பட்ட தாபத்தை என்னால் தாங்க முடியவில்லை. ஆதலால் தான் நான் அழுதுகொண்டு எழுந்திருந்து உம்மை ஆலிங்கனம் செய்து கொண்டேன்'' என்று கூறினார்.

புத்த கயையில் தங்கியிருந்த நாட்களில், நாங்கள் வெகு ஆனந்தமாக இருந்தோம்.

ஓங்காரானந்தர்: புத்த கயையில் ஞானமடைந்த பிறகு புத்த பகவான் உலாவிக் கொண்டிருந்த இடத்தில் சலவைக் கல்லாலான வெண் தாமரைகளை அமைத்து வைத்துள்ளனர்.

மகாபுருஷர்: ஆம். ஞானசித்தியடைந்த பிறகு புத்த தேவர் பேரானந்தமடைந்தார். இரவு முழுவதும் அவர் உலாவிக்கொண்டே இருந்தார். ஆத்மாராம நிலையைச் சுவைத்தவராய் உள்ளத்தில் ஆனந்தம் ததும்ப அவர் சுற்றிச் சுற்றி நடந்து கொண்டே இருந்தார்.

அன்றிரவு நாங்கள் நீண்ட நேரம் புத்த தேவரைப்பற்றி உரையாடினோம்.

நமது சிகர ஜோதி

மனிதனுக்கும் மதம்

மதத்தின் நோக்கம் இன்னது என்பதைப் பற்றி அறிஞர் பலவாறு கூறிவருகின்றனர். சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையவன் மனிதன் ஆதலின், அவனை நீடிய வாழ்வும் எல்லா நலங்களும் பேரறிவும் பெறுமாறு செய்து, எல்லாக் குறைகளையும் அவனிடமிருந்து நீக்கி, மனிதனது தன்மையிலும் மிக உயர்ந்த பூரணமான ஒரு தன்மையைப் பெற மதம் உதவவேண்டும் என்பர் ஒரு சாரார். உலக வாழ்விலும் மனிதப் பிறவியிலும் துன்பமும் கவலையும் மரணமும் செறிந்திருத்தலின், இதனினும் உயர்ந்த உலகில் தேவ சரீரம் பெற்று மனிதன் இன்பமாக வாழ்தலை மதம் நோக்கமாகக் கொள்ளல் வேண்டும் என்பர் இன்னொரு சாரார். அற்ப அறிவும் ஆற்றலும் அன்பும் உள்ள மனிதனை

அளவுகடந்த பேரறிவும் பேராற்றலும் பேரன்பும் பெற்றுப் பிறக்கும் ஒரு மஹாத்துமா ஆக்கவும், உலகத்தை ஆண்டுவரும் இறைவனுக்குப் பிரதிநிதியாக, அவனது ஆணைக்கு வழிப்பட்டு, உலகத்திலுள்ள மனிதரது முயற்சிகளையும் உலகத்தின் முன்னேற்றத்தையும், உலகத்தை இயக்கிவரும் பற்பல சக்திகளையும் அடக்கியாண்டு, உலக உபகாரச் செயல்களில் ஈடுபடும் தொண்டனுக்கவும், மதம் உதவிபுரிய வேண்டும் என்பர் வேறொரு சாரார். இன்னும் வேறு வகைகளாகவும் கூறுவர் பிறர். இம் மனிதப் பிறவியினின்றும் விடுதலையடைதலையும், அழியா உலகிலே மனிதன் திவ்விய உடலிலே அந்தமிலா இன்பம் ஒழிவில்லாக் காலமெல்லாம் அனுபவித்தலையும் பொதுவாக இலக்ஷியங்களாகக் கொண்டு, அவற்றை அடைதற்குரிய வழி காட்டவேண்டும் மதம் என்பதே பல மதத்தினரின் முடிபு. மனிதப் பிறப்பையும் இவ்வுலக வாழ்வையும் இழிவுடையனவாகக் கருதி வெறுத்து, இவற்றிலும் எல்லா வகையாலும் மேம்பட்ட ஒரு பிறப்பையும் உலகத்தையும் பெற விரும்புதலே பெரும்பாலாரது கருத்தாகும்.

ஆயினும் இதற்கு ஒருவாறு மாறான வேறொரு கருத்தும் பல நாடுகளிலும் உலவி வருவதை அறிஞர்கள் அறிவார். கிரேக்க நாட்டிலுள்ள ஒரு ஞானியார் பட்டப் பகலிலே, ஏற்றிய விளக்கைக் கைக்கொண்டு தெருவழியே யாதோ ஒன்றைத் தேடித் திரிவார்போல ஒரு சமயம் காணப்பட்டாராம்; அவரது அறிவுக்கு ஒவ்வாத செயலை அறிய முடியாது வினவிய ஒரு சிலர்க்கு அப்பெரியார் ''உலகத்திலே எங்கும் அரைக்கால் மனிதனும் கால் மனிதனும் அரை மனிதனும் முக்கால் மனிதனுமே காணப்படுகின்றமையால் முழு மனிதன் எங்கேனும் உளனே என்று தேடி வருகிறேன்'' என்றனராம். மனிதன் அறியவேண்டுவது தன்னையே என்பர் சில ஞானியர். ''மனிதனே, நீ யார் என்பதை முதலில் அறி'' என்று முத்தராய் வாழ்ந்த முழு ஞானியான ஸ்ரீ ரமண மஹரிஷிகள் அடிக்கடி கூறுவது உண்டு. 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றும், 'பெறுதற்கரியதும், இறைவனது அருளால் பெறக் கூடியதுமான ஒன்று இம்மனிதப் பிறவி' என்றும் மெய்யுணர்வு பெற்றோர் கூறியுள்ளனர். 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்றும், 'இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றும் மெய்யன்பினர் கூறியுள்ளனர். இறைவன் மனிதனைத் தன் வடிவில் அமைத்தான் என்னும் பைபிள். இந்திரன் முதலான தேவர்களும் வேறு உலகங்களில் வாழ்வோரும் இவ்வுலகிலே மனிதவடிவோடு பிறந்து நற்கருமங்களை இயற்றியதன் பயனாக, போகந் துய்த்தற்காக அவ்வவ்வுலகங்களிலே சென்று இன்பமாக வாழ்ந்து வருகின்றனர் என்னும் இந்துமத சாஸ்திரம்; இன்னும், அத்தேவர்களும் முத்தியடைதற் பொருட்டு மீண்டும் கரும பூமியாகிய இவ்வுலகிலே மனிதனாகப் பிறந்து, சாதனம் பயிலவேண்டும் என்றும் நம் சாஸ்திரம் கூறுகின்றது. இவற்றின் உட்கருத்தை ஆராய்ந்து பார்த்தால், மனிதப் பிறவியும் இவ்வுலகமும் மிகவுயர்ந்தன என்ற கருத்து வலியுறுகின்றது.

முற்கூறிய இருவகைக் கருத்துக்களையும் சேர்த்துச் சிந்திக்கும் போது, பின்வரும் வினாக்கள் எழக்கூடும். அவையாவன: மனிதனை மனிதனினும் மேலான ஒன்றாக ஆக்குவதே ஒரு மதத்தின் இலக்ஷியமா?—மனிதனை அவனது உண்மையியல்பை அறியச் செய்வதே இலக்ஷியமா? மனிதனைத் தனது மனித இயல்பினைக் கடந்து அப்பாற் செல்லுமாறு செய்யவல்ல சக்தியே மதமா?—மனிதனைப் போலி மனிதனாக்காது உண்மை மனிதனாக்க வல்ல சக்தியே மதமா? இக்கேள்விகட்கு விடையளிக்குமுன், முற்காலத்தையும் தற்காலத்தையும் ஒன்றாய் இணைக்கும் பாலம் ஆகி, முற்கால உயிர் தற்கால உடலோடு இணைந்து தற்கால மக்கட்கு உய்யும் வழி காட்ட முன்னின்றதென உதித்தவரான சுவாமி விவேகாநந்தர் உபதேசிக்கும் கருத்தையும் சிந்திப்பாம். மனிதனாக்குதலே கல்வியின் நோக்கமாதல் வேண்டும் என்பர் அப்பெரியார். உயர்ந்த கருத்துக்களை ஒருவனது மனத்தோடு தன்மயமாக்கி அவனது வாழ்க்கையாக மாற்றி, அவனை முடிவில் மனிதனாக்க வல்லது யாதோ அதே கல்வி யென்பர். மதத்தின் முடிவும் ஒருவனை மனிதனாக்குதலே என்று சுருக்கமாகவும் அழுத்தமாகவும் கூறுவர். ஆனால் மனிதனாக்கும் தொழிலை மிக உயர்ந்ததாகப் பாராட்டுதல் பொருத்தமோ என்ற ஐயம் ஒருவர்க்கு எழக்கூடும். மனிதனாதலும் உயர்ந்த பெருமையா என்று வினவலாம். கல்விக்கும் மதத்திற்கும் அம்முனிவர் கூறிய ஆழ்ந்த கருத்தமைந்த இலக்கணங்களைச் சிந்திக்கின், உண்மை தெளிவாகும். கல்வியாவது, மனிதனிடத்து உள்ளடங்கியுள்ள பூரணத்தன்மையை வெளிக்கொணர்தலே; மதமாவது, மனிதனிடத்து உள்ளடங்கியுள்ள தெய்வத் தன்மையை வெளிக் கொணர்தலே—என்று வரையறுத்

துக் கூறினர் அப்பேரறிஞர். மனிதனது அக இயல்பிலே அடங்கிக் கிடப்பது பூரணத் தன்மை, அதாவது தெய்வத்தன்மை என்பது அவரது அனுபூதியறிவு. பூரணத் தன்மையோ தெய்வத்தன்மையோ மனிதனது இயல்பாக ஆகாதபோது மனிதனுக்கு அவற்றைப் பெறல் இயலாதுபோகும். மனிதனிடத்துத் தெய்வத்தன்மை அடங்கிக் கிடக்குமாயின், அதனை வெளிப்படுத்துதல் அவனுக்குக் கைகூடுவதொன்றாயின், மனிதன் தனது முழு இயல்பை வெளிப்படுத்துதலே, அதாவது உண்மையான முழு மனிதனாதலே வாழ்க்கைப் பயன் என்பதாகின்றது. ஆக, மனிதனைத் தெய்வமாக்கலே மதத்தின் இலக்ஷியம் என்பதினும், மனிதனாக்குதலே இலக்ஷியம் என்னல் மிகவும் பொருத்தமன்றோ? இக்கருத்தையே சற்று விரிவாக ஆராய்வாம்.

மதவாழ்க்கையில் மிக உயர்ந்த அனுபூதிகளையும் மிக உயர்ந்த உபதேசங்களையும் யாம் பெற்றது, இவ்வுலகிலே நமக்கு நடுவே மனிதராக வாழ்ந்தவர்களிடமிருந்தே யாகும். மதக்குரவர்களைப் பகவானுடைய தூதர்கள் என்றும், அவதார புருடர்கள் என்றும் கூறுவது மரபு என்பதை மறுக்க முடியாது; எனினும் அத்தகைய உண்மைகளை நம்பிக்கைக்கு இலக்காக்குவதல்லாது, அறிவால் நேராக மெய்ப்பித்தல் எளிதான காரியமன்று என்பது வெளிப்படை. அம்மதக் குரவர்களைப் பற்றி யாம் உறுதியாக ஐயந்திரிபறக் கூறக்கூடிய ஓர் உண்மையாவது, அவர்கள் மனிதர்களே என்பது. மனிதனுக்கு மனிதனைவிட மிக உண்மையான பொருள் வேறில்லை. மனிதன் தனது இருப்பினை உண்மையானதாகக் கொண்டே, பின்னர் தன்னால் உணரப்படும் பொருள்களின் உண்மையை ஆராய்கின்றான். மனிதனுக்குத் தனது உண்மையைப் பற்றி ஐயம் எழுமாயின், அவன் கண்ட உண்மைகள் அனைத்தையும் பற்றிய ஐயம் அதனினும் நூறு மடங்காதல் வேண்டும் அன்றோ? மனிதனுக்குத் தனது வடிவத்தையும் இருப்பையும் பற்றிய உண்மையுணர்ச்சி அடிப்படையாயிருத்தலினாலன்றோ, அவன் அடைய நினைக்கும் உயர்வற உயர்ந்த இலக்ஷியமாகிய இறைவனும் மனிதனது வழிபாட்டை ஏற்கும்போது, மனித வடிவோடும் மனிதப் பண்போடும் பொருந்தி நிற்றல் இன்றியமையாததாகின்றது? மனிதன் இறைவனைத் தெய்வவடிவிற் காணும்போதும், அது மனிதப் பண்பின் அளவுகடந்த பெருக்கமாகவே உணரப்படுகின்றது. மனிதன் இறைவனை வழிபடுதற்காக மனக்கண்முன் பாவிக்கும் போது, அவனது அக இயல்பிற்கு ஏற்றவாறே இறைவன் அமைந்திருப்பதை உணரலாம்; அவனது மனம் தூய்மை யடைய அடைய, அவனது உண்மையியல்பு வெளிப்படும் அளவுக்கு இறைவனைப்பற்றிய கருத்தும் தூய்மை மிகுந்து வருகிறது. மனிதன் முற்றிலும் தூயனாகும்போது, இறைவனும் முற்றும் தூயனாகக் காணப்படுகிறான். பழிக்குப் பழி வாங்கும் இயல்புடைய ஒருவன் தன் இறைவனையும் அக்குணத்திற் சிறந்தவனாகக் கருதிப் பிரார்த்திக்கிறான்; இரக்கம் மிகுந்த நெஞ்சினனது பாவனைக்கு விஷயமாகும் இறைவன் அப்பண்பில் தன்னினும் பன்மடங்கு மேம்பட்டவனாகவே உணரப் படுகிறான். இவ்வுண்மையைச் சிந்தித்தறிந்த ஓர் அறிஞர் 'மனிதன் இறைவனைத் தன் இயல்பிற்கு ஏற்றவாறு தன் வடிவமாகவே படைத்துக் கொள்ளுகிறான்' என்றும் துணிந்து கூறலானர். அன்பினால் இறைவனை வழிபடும் ஒரு மனிதன் 'என் தன்மை ஒழிந்து நின்தன்மையே உண்டாகட்டும்' என்று நெஞ்சார வேண்டும்போதும், தனது தோற்றமான புற இயல்பு ஒழிந்து உண்மையான அக இயல்பு வளரவேண்டும் என்று கருதுபவனே யாகின்றான். அன்பு முற்ற முற்ற, ஒரு மனிதன் தனது அன்பிற்கு உரியானிடம் தனது மனதிற்கு விளங்கக்கூடிய மிகவுயர்ந்த இலக்ஷியத்தையே காண்கின்றான். உயர்ந்த அன்பால் ஒருவனது மனம் முற்றும் தூயதாகும்போது, அவனது மனத்து ஆழத்தே புதைந்துகிடக்கும் உண்மையான இயல்பே புறத்தே இறைவனது தூயவடிவமாகக் காட்சியளிக்கின்றது. மனிதன் தனது மனித இயல்பு ஒழியப்பெற்றுத் தான் வழிபடும் தெய்வ இயல்பு குடிகொள்ளவேண்டும் என்று தியானிக்கும் (பிரார்த்திக்கும்) போதெல்லாம், அத்தெய்வ இயல்பு தன்னிடத்து முன்பு உள்ளடங்கியிருந்து பின்பு வெளிப்பட்ட உண்மையான மனித இயல்பாகவே முடிகின்றது. மனிதன் ஆரம்பத்தில் தனது மனித இயல்பை மறுத்தும் வெறுத்தும் வரினும், தெய்வ இயல்பை வற்புறுத்தியும் விழைந்தும் வரினும், முடிவில் தான் ஆதாரத்தோடு விழைந்த தெய்வ இயல்பு தனது உண்மையான மனித இயல்பாவதையே உணர்கின்றான். இம்முடிபு பக்திநெறியைப் பின்பற்றுவோர்க்கும் ஞான நெறியைப் பின்பற்றுவோர்க்கும் ஒப்பமுடிந்த ஓர் உண்மையாகும். மனிதன் உண்மையில் ஆன்மாவே என்றும் அந்த ஆன்மா பிரம்மமே என்றும் கூறுவர் அத்வைத வாதியர்; மனிதனுக்கு உயிராய்

அமைவது ஆன்மா என்றும், அவ்வான்மாவுக்கும் ஆன்மாவாக அமைவது பிரம்மம் என்றும் கூறுவர் விசிஷ்டாத்வைத வாதியர். ஒரு மனிதன் உண்மையில் உடலாவதில்லை உயிரேயாகிறான் எனின், இன்னும் ஒரு படி மேலே செல்லும்போது அவ்வுயிர்க்கும் உயிரான பிரம்மம் ஆகிறான் என்பது தானாகவே வரும் உண்மையன்றோ? ஆக, மதம் செய்யும் தொழில் யாது எனின், அது (போலி) மனிதனிடத்திலிருந்து தொடங்கி (உண்மையான) மனிதனிடமே வட்டஞ் சுற்றிவந்து முடிகிறது; மனிதனைப்பற்றிய அறியாமையிலிருந்து தொடங்கி, மனிதனைப்பற்றிய உண்மையறிவில் வந்து முடிகிறது; உடலோடும் மனத்தோடும் தவறாக ஒன்றுபடுத்திக் கொண்டு உழலும் 'நான்' (அஹம்) என்னும் மனித நிலையிலிருந்து தொடங்கி, அனைத்திற்கும் அன்னியமான ஆத்மாவாக நிற்கும் மனித நிலையில் வந்து முடிகின்றது. ஆதலின் மதத்தின் நோக்கம் மனிதனுக்குதலே என்று கூறுதல் உயர்வற உயர்ந்த இலக்ஷியத்தையே வற்புறுத்திய தாகின்றது.

மதத்தின் நோக்கம் மனிதனைத் தனது உண்மையியல்பினை உணருமாறு செய்தலே என்பதாயின், மதம் என்பது நம்மீது அதிகாரஞ் செலுத்தி நம்மை அடக்கியாளும் ஓர் எஜமானனன்று என்னும் உண்மை தெரிய வரும். மதம் சிலர் எண்ணுவதுபோல, நம்மைக் கட்டுப்படுத்தி நம்மிடம் ஒரு குறிப்பிட்ட வேலையை வாங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு தலைவனன்று; நமது புகழைப் பாடுவதற்காக நம்மால் நியமிக்கப்பட்ட ஒரு பணியாளன் என்பதே ஆகின்றது. அனுமன் ஒரு சாபத்தால் தனது பெருமையை மறந்திருந்ததாகவும், அவனது வீரத்தையும் பராக்கிரமத்தையும் பிறர் புகழக் கேட்கும்போது மறதி நீங்கி வீராவேசம் அவனிடம் தலையெடுத்ததாகவும் யாம் இராமாயணத்தில் கேட்டுளோம்; அதுபோல நம்மிடம் மறதிக் கடலில் ஆழ்ந்துள்ள நமது உண்மையான பெருமையை நமக்கு நினைவூட்டுவதே மதம். எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த, ஒப்பாரும் மிக்காரும் அற்ற, அனைத்துலகிலும் செங்கோல் செலுத்திவரும் அரசர்க்கரசனாய ஈசனின் செல்வக் குழந்தை மனிதன் என்னும் திவ்விய உறவினை மறந்து ஊண், உடை, உறக்கம் என்பவற்றிற்கு அடிமையாகி நிற்கும் ஓர் ஊன்பொதிக்கு ஆட்பட்ட ஏவலாளன் எனும் உறவிலே மூழ்கித் துயருறுகிறான் மனிதன்; அவனுக்கு நிலையான அழியாத உறவை நினைவூட்டி ஈசனது பேரரசிற்கு இளவரசுப்பட்டம் சூட்ட முயல்கின்றது மதம். மனிதனிடம் கண்ணுக்குப் புலப்படாது மறைந்துகிடக்கும் அளவற்ற அரு நிதியத்தை நேராகக் காட்டும் அஞ்சனம்போல உதவுவது, மதம். இத்தன்மையதாதலின் மதத்தின் மிகவுயர்ந்த ஓரே உண்மையான தொழிலாவது, மனிதனுக்குதலேயாம். மத சாதனங்களைப் பழகிவருங் காலத்து, முற்கூறிய மதத்தின் உன்னதப் பணியை மறவாது மனத்திற் போற்றி வாராவிடில், உண்மை மதத்தின்மீது கறை படிய ஆரம்பிக்கும்; மனிதனைத் தாழ்வெய்தவும் மனிதத் தன்மையை இழக்கவும் செய்யவும் ஏதுக்கள் பல அதனிடத்துத் தோன்றும். உதாரணமாக சமயக் கிரியைகளின் (பூஜை சந்தியா வந்தனம் முதலிய கிரியைகளின்) உட்கருத்தை யறியாது அவற்றில் ஈடுபடுவோர் உண்மையான சமயப் பயிரை வளர்க்காது, அதனை வளரவொட்டாது தடுக்கும் களைகளை விரைவாகச் செழிக்கச் செய்வர். மத சாதனங்களைச் சிரத்தையோடு பழகுவார்க்கு இறந்தபின் நல்ல உலகை யடைந்து நீடூழி காலம் இன்பமாக வாழும் பேறு வந்தெய்தும் என்று சில மதங்கள் கூறுகின்றன; இறந்தபின் உயர்ந்த பதவிகளும் பொறுப்புகளும் ஆட்சியும் வந்து சேரும் என்றும், சாதனங்களைப் பழகும் திறமையின் உயர்வுக்குத் தகுந்தவாறு மேன்மையுற்ற உலகங்களில் வாசமும் அதிகாரமும் வாய்க்கும் என்றும் வேறு சில கூறுகின்றன. ஆனால் மனிதனது உண்மையியல்பாகிய ஆன்மாவை உணர்தலினால் வரும் பேரின்பத்திற்கும் பேராற்றலுக்கும் பேரன்பிற்கும் இணையாக வேறெந்த உலகில் வாழும் வாழ்க்கையின்பத்தையும், எந்த உலகிற் பெறும் பதவியையும் கூற முடியாது. அந்த உண்மை யுணர்வை விட்டு மனிதனது மனத்தினை விலக்க முயலும் எந்த மதக் கருத்தும் சிந்தைக்கினிய கருத்துக்களை மட்டும் மனத்திற்கு ஊட்ட முன் வருகின்றது. இதனால் மனிதன் தன் உள்ளத்துப் பொங்கும் உணர்ச்சிக்கு வசப்பட்டுப் பலவீன மடைகின்றான், அன்றேல், மூடக் கொள்கைகளிலே பிடிவாதமுள்ளவனாகிறான்; அதன் விளைவாக, வாழ்க்கையிலே செய்தற்குரிய மேம்பட்ட பணிகளை ஆற்றத் தகுதியற்றவனாகிறான். ஒரு மனிதன் தனக்குப் புறத்தே அடைதற்குரிய மிகமேலான ஒன்றை நாடும்போதும், அம்மாண்பு அவனுக்கே அணியாகின்றது; அதை நாடும் முயற்சியால் அவனுள்ளத்திலே அறுதியாக ஏற்படும் ஆன்ம சக்தியின் மலர்ச்சியே புறத்தே அவனால் இயற்றப்பட்ட ஒரு காரி

யத்திற்கு அருமை பெருமைகளை ஊட்டுகின்றது. மனிதன் புறத்தே நேருக்கு நேரே காணும் தெய்வத் தன்மையும் அவனது அகத்தேயுள்ள தெய்வத்தன்மைக்கே சான்று பகர்கின்றது.

மேலும், உயர்வற உயர்ந்த அநுபூதியின் சிகரத்தை எய்திய ஒரு மனிதரை—புத்தர், கிறிஸ்து, சைதன்யர், ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்ற ஓர் உத்தம ஞானியை—மனிதர் என்னாது கடவுளே என்று கூறுவதனால், அவர்க்கு உரிய பெருமையை ஒரு சிறிதேனும், நம்மிற் பலர் நினைப்பதுபோல, மிகுதிப்படுத்துகிறோமா என்பதும் சந்தேகத்திற்கு இடந்தான். மக்கள் தமது சிந்தனைக்கு எட்டாத சக்தியை ஒரு பொருளிடத்துக் காணும்போது, அதனை இயற்கைச் சக்தியெனறு கூறாது, தெய்வத்தின் சக்தியே என்று கூறுவர்; திடீரெனப் பூகம்பத்தால் தமது நாட்டின் ஒரு பகுதி கடலிற்குள் ஆழ்ந்துவிடும் எனின், அதனைத் தெய்வ சக்தியாகவே நம்புவர், இயற்கையின் பெருவலிமை என்று சொல்லார். அசாதாரணமான அறிவையோ அன்பையோ ஆற்றலையோ ஒரு மனிதனிடத்துக் காணுங்கால், அதனை மனிதனது இயல்பான சக்தி யென்னாது தெய்வ சக்தி யென்றும், அவனை மனிதப் பிறவி யென்னாது தெய்வப் பிறப்பு என்றும் சொல்வது மரபே யாகிவிட்டது. சடப்பொருள்களின் இயல்பினை ஆராய்ந்து காணும் விஞ்ஞானிகள் அவற்றிற் காணும் எவ்வகைப் பேரளவினதான சக்தியையும் அவற்றின் இயல்பான சக்தியென்றே உரைப்பர்; அதுபோல் மனிதனிடம் காணும் அளவுகடந்த பெருமையையும் அவனது இயல்பிற்கே உண்மையாக உரியது என்பதே மிகவும் பொருத்தமாகும். மனிதன் இயல்பாகவே சாதாரண நிலையில் தனது அறியும் சக்தியும் எல்லைக்குட்பட்டிருப்பதை நன்கறிவானாயினும், அக்காரணம்பற்றியே அவ்வெல்லையை மீறிச் செல்லும் பேரவா அடிக்கடி தன் உள்ளத்துப் பிடிவாதமாக எழுவதையும் தெளிவாக உணர்கிறான்; வரையறைக்கு உட்பட்டிருக்கும் சாதாரண நிலையைச் சதா மறுத்து அப்பாற் செல்ல முயலும் தன்மையையே கடவுளின் தன்மை எனக் குறிக்கிறோம். ஆதலால் தெய்வத் தன்மை வாய்ந்த மனிதரைப் பகவானது அவதாரங்கள் எனும் பெரும் பெயரால் அழைக்கும்போது, நாம் செய்வது யாதெனில், நமது அறிவிற்கு எட்டாத நிலைவரை அப்பெரியார்களின் தூய்மையையும் ஞானத்தையும் உயர்த்துவதொன்றேயாம். ஆனால் 'மனிதன்' எனும் மொழியின் பொருளிலே, அவனால் இதுகாறும் வெளியிடப்பட்டுள்ள திறமைகளை மட்டும் குறியாது, அவனிடத்து வெளிவாராது அடங்கிக் கிடக்கும் அரும் பெரும் சக்திக் களஞ்சியத்தையும் உள்ளடக்கிக் கொள்வோமாயின், தெய்விக மனிதர் 'அவதார புருடர்' என்னும் மொழிகளாற் குறிக்கப்படுவதெல்லாம் 'மனிதன்' என்னும எளிய மொழியாலே குறிக்கப்படும். அவ்வாறாக, 'மனிதன்' எனும் மொழியின் விரிந்த பொருளைத் தறித்துக் குறுக்கி, அக்குறுகிய பொருளிலே அம்மொழியை எந்நூலிலும் வழங்க நமக்கு அதிகாரம் யாது? "இவ்வுலகிலே மனிதனினும் உயர்ந்தது யாதொன்று மில்லை" என்றார் ஓர் அறிஞர்; அதோடு நாம், இவ்வுலகில் மட்டு மன்று, மனிதனது சிந்தனைக்கு எட்டக் கூடிய புற உலகமோ மன உலகமோ எதிலும் மனிதனினும் மேலான ஒரு பொருள் இல்லை யென்றும் சேர்க்கலாம். ஏனெனில் பிரம்மாவின் படைப்புக்குட்பட்ட வேறு எப்பொருளினும் பார்க்கச் சிறந்த உன்னத நிலையில் இருப்பவனும், தன்னுணர்ச்சியோடு வளர்ந்து முற்றிப் பூரண நிலையை எய்தியவனும் மனிதனே; படைக்கும் முறையையும் சக்தியையும் முழுதும் தன்னகத்தே தொகுத்து வைத்திருப்பவனும் அவனே.

இத்தகைய பெருமை வாய்ந்தவன் மனிதன் ஆதலின், போலி மனிதனது நிலையிலிருந்து உண்மையான மனிதனது நிலைக்குச் செலுத்தும் தொழிலினும் மேம்பட்ட தொன்று மதத்திற்கு இல்லையென்று பகரலாம். சுவாமி விவேகாநந்தர் தம்மை அண்டியவர்க்கு மனிதனைக்கும் மதத்தைப் பற்றிப் போதிக்குங்கால், மதத்தைப் பற்றிச் சரியான கருத்து உண்டாவதற்காக முதல் முதலாவதாக மனிதனைப் பற்றிய உண்மை இயல்பையே அழுத்திக் கூறுவார். மதத்திற்கு நடு நாயகமாய் ஒளிர்வது மனிதனது பெருமை என்பார்; அதையொட்டியே இறைவனது பெருமையையும் விளக்குவார். மனிதனுக்குத் தன்னம்பிக்கை இல்லாதவிடத்து அவனை நாத்திகன் என்பார்; தன்னம்பிக்கையே இறைவனிடத்தெழும் நம்பிக்கைக்கு வேர் எனக் கொள்ளுவர். தன்னம்பிக்கை முற்றும் வளர்ந்து மொய்ம்புறும்போது, அதுவே இறைவனிடத்துள்ள நம்பிக்கையாக உருமாறி நிற்பதையும் எடுத்துரைப்பார். இரண்டாவதாக மனிதன் தனது ஞான ஆக்கத்திற்கு வேண்டிய சூழ்நிலையினைப் படைத்துக் கொள்ளுதற்குப் பிறி

தொரு துணையும் வேண்டாது தற்சார்ந்து நிற்றலே போதும் என்றும் வற்புறுத்துவார். தற்சார்ந்து நில்லாது பிறிதொன்றைச் சார்ந்து புறத்தே எதிர்பார்த்து நிற்பவன் பல வீனத்தைப் போற்றி வருவதோடு தோல்வி யையும் விரும்பியழைப்பவனாகிறான். ஒரு சிலந்தி தன்னிடமிருந்தே நூலை நூற்று அழ கியதொரு வலையமைத்துத் தன் இச்சைப்படி வாழ்வது போல, மனிதனும் தனது சுய வலிமை யொன்றினாலே புற உலக வாழ்க் கையை விரும்பியவாறே அமைத்து, தனது ஆத்மாவின் சொல்லற்கரிய பெருமையினை உலக அனுபவ வாயிலாக வெளிக்காட்டு வான். தனது உண்மையான இயல்பை உணர்ந்து, அதற்கியைய வாழும் ஒரு மனி தனைச் சுற்றி மனிதர்களும் காரியங்களும் பலவகையாகத் தாமே ஒழுங்குபட அமைந்து, அவனது நோக்கத்தை நிறைவேற் றும் விசித்திரம் காணப்படும். அம்மாதிரி யான மனிதன் தானே தனது இச்சைப்படி மற்ற மனிதர்களையும் காரியங்களையும் ஒழுங் காக அமைக்கிறான் என்பதுமன்று; அம் மனிதனது இயல்பினாலே, அவ்வியல்பில் அடங்கியுள்ள மறைவான பெருஞ் சக்தியின் பயனாகத் தாமே அனைத்தும் அமைப்புக் கொள்கின்றன. அவனே ஒழுங்கான அமைப்பின் வடிவமாகின்றான்; அவன் தன் வாழ்க்கையை இயல்பாக நடத்திவரும் போதே, பல மக்கட்குத் தலைவனாகவும் பல நிலையங்களை அமைப்பவனாகவும் விளங்குதல் இன்றியமையாததாகின்றது. ஒரு பெரியா ரால் ஏற்படுத்தும் ஒரு நிலையமோ சங்கமோ அவரது நீண்ட நிழலே யாகின்றது என்பர் ஓர் அறிஞர்; அப்பெரியார் ஞான ஒளியின் முன் நிற்கும்போது அவரைப் போன்ற ஒரு நீண்ட சாயை தரையில் தானாகவே வீழ்கின் றது என்பதே அதன் கருத்து. புத்தர், தாமே பௌத்த சங்கமென்றும், பிற்காலமெல்லாம் தாமே அவ்வாறு வாழ்வர் என்றும் கூறினார், மெய்யுணர்ந்த ஒரு பெரியார்க்கு அவரைப் பின்பற்றி வாழும் சங்கம் உடலாகும் என் றும், அப்பெரியார் அச்சங்கத்தில் வாழ்வார் என்றும் கூறுவர். தனது உண்மையியல்பை உணர்ந்த மனிதன் மலர்ச்சியடையும்போது, பல நிலையங்களாக உருக் கொள்ளுகிறான். அவன் சங்கங்களையும் நிலையங்களையும் அமைப்பதாகப் பிறர் கூறுவதன்றி, உண் மையில் அவனே அவ்வடிவங்களாகின்றான். போலி மனிதன் பல காரியங்களையும் இயற்று கிறான் என்பது சரியே; ஆனால் உண்மை யான மனிதனோ ஒருபோதும் ஒன்றையும் இயற்றாது, எப்போதும் வேண்டியவாறு ஆகிறான்; பரந்த கடலில் நதிகள் பல புகு மெனினும், கடல் எப்போதும் அலையலையாக அசைந்த வண்ணமாயிருப்பதன்றி, நதிக்குட் புகுவதில்லை என்பது போல.

மனிதன் தனது இயல்பையே செயல்கள் மூலம் வெளிப்படுத்துகிறான் என்னும் உண்மை-அதாவது மனிதனது அகவியல்பே அவனது செயல்களிலும் அவனால் அமைக்கப் படும் நிலையங்களிலும் அவற்றின் வாயிலாக வும் வடிவு கொள்கின்றது என்னும் உண்மை—உலகிற்கு நன்மை செய்ய முற் படுவாரிடத்தெல்லாம் நினைவில் வேரூன்றி இருக்கவேண்டிய தொன்றாகிறது. நமது ஸமூக வாழ்க்கையைத் திருத்தியமைக்கவோ மேம்படுத்தவோ நடைபெறும் முயற்சிகளில், சரியான மனிதனைமட்டும் யாம் வாய்க்கப் பெறுவோமாயின் மற்ற யாவும் சரியாகவே அமையும் என்பது உறுதி. ஸமூக ஸேவை எனும் தேர்க்கு அச்சாணியன்னதோர் உண்மை இதுவே யென்பதை நாட்டுத் தலை வர் பலரும் ஓர்தல் வேண்டும். சரியான மனிதன் ஒருவன் எதனையும் சரியாக்கி ஒழுங் காக இயங்குமாறு செய்வான். எவ்விதமான நன்முயற்சியைக் தொடங்கும் போதும், நமது மனத்தில் எழும் ஒரு கேள்வியாவது. சரியான ஒரு மனிதனைப் பெற்றோமா என்பதே. அப்பேறு வாய்க்குமாயின், அவ னது வெற்றிக்குரிய நிலைமைகள் யாவும் அவன் தனது இயல்பை வெளிப்படுத்த முய லும் போது, தாமே பணிந்து அவனது காலடியில் அமர்ந்து, அவன் மேலேறிச் செல்வதற்கேற்ற படிகளாக அமையும். சரி யான மனிதன் ஒரு ஸமூகத்தினிடம் தோன் றுதவரை, அந்த ஸமூக வாழ்வினைப் பற்றிய காரியங்களெல்லாம் தாறுமாறாகவும், உருத் தெரிய வொட்டாது குழம்பியும் கிடக்கும்; அவ்வமயம் ஸமூக நிலையினைச் சிந்திப்பார்க்கு எத்தனையோ பலவகையான இடையூறு களையும் இன்னல்களையும் எதிர்த்தழிக்கும் அவசியமும், அதனைச் செய்யும் அருமையும் கண்முன் தாண்டவமாடும். ஆனால் சரியான மனிதன் பலர்க்கு அச்சம் விளைக்கும் ஒரு சூழ்நிலையின் நடுவே தோன்றியதும், அவ் விடையூறுகளும் சங்கடங்களும் எதிர்ப்பு களும் தாமாக உருமாறி அவனது வெற்றிக் குத் துணைகளாகவும், பக்க பலங்களாகவும், கருவிகளாகவும் உதவுகின்றன. இவ்வுண் மையைத் தமது கூரிய அறிவாலும் ஒள்ளிய அனுபூதியாலும் தெளியக் கண்டவர் சுவாமி விவேகாநந்தர்; தமது நாட்டிற்கும் ஏனைய உலகப் பகுதிகட்கும் தொண்டு செய்தற்காக

ஏற்படுத்திய திட்டங்களிலெல்லாம் அவர் மனிதனுக்கும் மத சாதனங்களைப் பழகுதலை அடிப்படையாகக் கொண்டமைக்கும் அதுவே காரணமாயிற்று.

சுவாமி விவேகானந்தரது இத்தூய கருத்தின் விழுப்பத்தை (மேன்மையை) உணர மாட்டாதார் சிலர் மனிதனுக்கும் கல்வி யென்று பொருள்படும் ஆங்கிலத் தொடர்மொழியை 'ஆண்மை யளிக்கும் கல்வி' யென்று மொழி பெயர்த்து, (தனி வாழ்க்கையிலும் ஸமூக வாழ்க்கையிலும்) உடல் வலிமையாலும் அறிவு வலிமையாலும் உணர்ச்சி வலிமையாலும் மனத்திண்மையாலும் விளையும் பலமே ஆண்மையெனக் கொள்கின்றனர். அகங்காரத்தால் எழும் இவ்வலிமை போலி மனிதனையே சார்ந்தது என்பதையும் இவ்வலிமையை வற்புறுத்துங்கால் எதிர்ப்பும் சங்கடங்களும் இன்னல்களும் வாழ்க்கையிற் பெருகும் என்பதையும் நண்பர்கள் மறந்து விடாதிருப்பாராக. மனிதனது அகங்காரத்திற்கு அப்பாற்பட்ட உண்மையியல்பை (ஆன்ம இயல்பைப்) பற்றியெழும் வலிமையே உண்மை மனிதனது பெருமையாகும்; அவ்வியல்பை உணர்தற்கே உடல் வலிமையும் மன வலிமையும் பிற வலிமைகளும் பயன்பட வேண்டும். அகங்கார பலம் இராஷஸ பலமேயாம்; அதற்கு அப்பாற்பட்ட ஆன்ம பலமே, ஞான பலமே, மனிதனது உண்மை இயல்பைப் பற்றிய பலமே, எவ்வகையான முயற்சிக்கும் (தொண்டுக்கும்) அடிப்படையாக அமைய வேண்டும் என்று சுவாமிகள் வற்புறுத்தினர்; அப்போதுதான் உண்மையான வெற்றி தானாக வந்தமையும். 'மனிதனுக்கும் கல்வி' 'மனிதனுக்கும் மதம்' என்று சுவாமிகள் முழங்கும்போதெல்லாம், தனது உண்மை இயல்பை (ஆன்ம இயல்பை) உணரும் மனிதனே உண்மை மனிதன் என்பதையும், அத்தகைய மனிதனாக ஆக்குதலே கல்விக்கும் மதத்திற்கும் இலக்ஷியமாக வேண்டும் என்பதையும் நண்பர்கள் நினைவிற் பதித்து வைத்துக் கொள்வார்களாக. (இக் கட்டுரையில் 'மனிதன்' என்னும் மொழி ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான மனிதக் குலத்தையே குறிப்பதாகக் கொள்ளப்படல் வேண்டும்.)

மீண்டும் காண்பேனோ?

['வேதாந்த கேசரி'யினின்றும் மொழிபெயர்த்தது.]

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரை நேரிற் காணும் பாக்கியம் பெற்றவர்களுடைய தலைமுறை அநேகமாக மறைந்து போய் விட்டதெனலாம். அந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஏதோ வெகு சிலர் இன்னமும் இருந்து வரலாம். நூல்களின் மூலம் பரமஹம்ஸதேவருடைய பெருமையை அறிந்து கொண்ட இக்காலத்தவருக்கு அச்சிலரைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தால் அதைப் பெரும் அதிருஷ்டமாகவே கருதுவார் அல்லவா?

அமெரிக்காவில் தென் காலிபோர்னியாவில் வேதாந்த ஆசிரமம் ஒன்றுக்குத் தலைவராக உள்ள சுவாமி பிரபாவானந்தர் 1949-ம் ஆண்டில் பாரத நாட்டுக்கு விஜயம் செய்தார். அப்பொழுது அவர் கொஞ்ச காலம் விஷ்ணுபூர் எனும் இடத்தில் தங்கியிருந்தார். அமெரிக்க நாட்டைச் சேர்ந்த துறவிச் சீடர் நால்வரும் அவருடன் வந்திருந்தனர்.

விஷ்ணுபூர் மக்கள் சுவாமிகளைக் காணத் திரள்திரளாக வந்தனர். அவ்வாறு வந்தவர்களுள் விரஜ நாராயண சாட்டர்ஜி என்பவர் ஒருவர். அவர் வயது மிகுந்தவர்.

விரஜ நாராயண சாட்டர்ஜி பரமஹம்ஸ தேவரை நேரிற்காணும் பேறு பெற்றவர். அவர் தமது வரலாற்றை இவ்வாறு எடுத்துரைத்தார். வெகு காலத்திற்கு முன் நடைபெற்ற ஒரு இன்ப நிகழ்ச்சியை நினைவுக் கொண்டு வரும்பொழுது ஏற்படும் ஆழ்ந்த பார்வை அவரது நயனங்களில் ஜொலித்தது.

ஒரு நாள் தனது புருஷன் வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்த என் அக்காள் ஒருத்தியுடன் நானும் கூடச் சென்றேன். செல்ல வேண்டியிருந்த இடம் கமார்ப்பு கூருக்கு அருகில் இருந்தது. அன்று வெப்பம் மிகுந்திருந்தது. எனக்கு அதிக தாகம் ஏற்பட்டது. நாங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு அருகில் குளம் ஒன்று இருந்தது. வண்டியை நிறுத்தி விட்டு நான் நீர் பருகச் சென்றேன். குளத்தின் கரையை நெருங்கியதும் அழகிய முக விலாஸம் உடைய புண்ணிய புருஷர் ஒருவரை நான் கண்டேன்.

மரத்தின் கிளை ஒன்றைப் பிடித்துக்கொண்டு அவர் பிரசாகம் பொருந்திய புன்னகை யுடன் என்னை நோக்கினர்.

"என், குழந்தாய், உனக்குத் தாகமாக இருக்கிறதா? நீர் பருகவேண்டுமா?" என்று அவர் வினவினர். அம் மகாபுருஷருடைய நயனங்களும் புன்னகையும் என்னை வசீக ரித்து ஸ்தம்பிக்குமாறு செய்து விட்டன.

"ஆம்" என்றேன் நான். அவர் தமது கைகளைக் குளத்தில் இட்டு நீர் எடுத்து, கிண் ணம் போன்று ஒன்று சேர்ந்த அவரது உள் ளங்கைகளினின்றுமே என்னை நீர் குடிக்கு மாறு செய்தார். இம்முறையில் மூன்று, நான்கு தடவைகள் நான் அவரது கரங்களில் நீர் பருகினேன்.

"என்ன, இன்னமும் தண்ணீர் வேண் டுமா?" என்ருர் அப்புண்ணிய புருஷர்.

"வேண்டாம். போதிய அளவு பருகிவிட் டேன்" என்றேன், நான் அவரது கண்களைப் பார்த்துக் கொண்டே.

என் அக்காளின் புருஷனுடைய வீடு வந்து சேர்ந்த பொழுது அவர் எங்களுக் காகக் கவலையுடன் காத்துக் கொண்டிருந் ததைக் கண்டோம்.

"என் இவ்வளவு நேரமாய் விட்டது?" என்று அவர் கேட்டார்.

"எனக்கு அதிக தாகம் ஏற்பட்டது. நீர் பருக வேண்டி வந்தது. ஆதலால், அதோ அங்குள்ள குளத்தினருகில் இருந்து விட்டு வந்தோம். அங்குள்ள புண்ணிய புருஷர் தமது கரங்களைக் கொண்டே எனக்கு நீர் பருகுவித்தார்" என்றேன் நான்.

எனது அக்காள் புருஷன் சிரித்தார். "அந்த மனிதரா? அவர் யார் தெரியுமா? பைத்தியக்காரக் கதாதரரல்லவா? அவர் சுத் தப் பைத்தியக்காரராயிற்றே!" என்ருர்.

குளமிருந்த பக்கத்தை நான் மீண்டும் நோக்கினேன். "அதெல்லாம் எனக்கு ஒன் றும் தெரியாது. ஆனல் ஒரு விஷயம் எனக் குத் தெரியும் — அவர் என்மீது பிரேமை மிகக் கொண்டுள்ளார்" என்றேன்.

அந்தப் புண்ணிய புருஷருடைய நயனங் களும் அவரது புன்னகையும் என் அகக்கண் முன் தோன்றிக் கொண்டேயிருந்தன. பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் குளக்கரைப் புண்ணிய புருஷர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம் ஸரே என்பதை நான் அறிந்தேன். நான் அவரைக் கண்டபொழுது அவர் ஆனந்த பர வச நிலையில் இருந்தாரென்று எனக்குத் தோன்றுகின்றது.

பின்னளில் நான் பாடசாலை இன்ஸ்பெக் டர் (கண்காணிப்பாளர்) ஆனேன். நான் பல இடங்களுக்குச் சென்று வரும்பொழுது ஜயராம்பாடிக்கும் ஒரு சமயம் சென்றேன். ஒரு நாள் அவ்வூரில் அந்திப்பொழுது நேரத் தில் நான் உலாவி வந்தபொழுது குளக்கரை யொன்றை அடைந்தேன். சூரிய அஸ்த மனக் காட்சி நிறசோபை மிகுந்திருந்தது. பெரிய ஆல மரமொன்றின்மீது நான் சாய்ந்து கொண்டு நின்றேன். வழக்கம் போல, அந்தப் புண்ணிய புருஷருடைய சந் திப்பைப் பற்றிய ஞாபகம் என் மனத்தினில் மீண்டும் எழுந்தது. கமார்ப்புகூர் இருந்த திசையை நோக்கிக் கொண்டே நான் "ஆம், அங்கு இறைவனை நான் நேரிற் கண்டேன். மீண்டும் அவரைக் காண்பேனே?" என நினைத்தேன். திடீரென்று என் கண் முன் பளிச்சென்று மின்னல் ஒளி வீசிற்று. அம் மகாபுருஷர் என்னை மறந்து விடவில்லை என் பதை அப்பொழுது உணர்ந்தேன்".

இவ்வாறு விரஜ நாரரயணர் சொல்லி முடித்தார். அவ்வயோதிகருடைய உடல் உணர்ச்சி மிகுதியால் நடுங்கிற்று. பிரப வானந்த சுவாமிகள் இந்த வரலாற்றைத் தமது அமெரிக்க சீடருக்கு ஆங்கில மொழி யில் எடுத்துக் கூறினர். ஸ்ரீ ராமகிருஷ்ணரு டைய பக்தர்களான அம்மேனட்டினர் அடி பணிந்து விஜய நாராயணருடைய பாத தூளியை ஏற்றனர்.

இந்தியாவிலும் மேனடுகளிலும், ஆயிரக் கணக்கான ஆலயங்களிலும் இல்லங்களிலும் இன்று ஆராதிக்கப்பட்டு வரும் தெய்வ புரு ஷருடைய கரங்களிலேயே நீர் பருகிக் குளி ரும் பாக்கியம் பெற்றதன்ரே விரஜ நாராய ணருடைய அதரம்?

அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்

E. V. சோமசுந்தரம், B.A.

இவ்வுலக வாழ்வில் தொந்தரவுகளையும் துயரங்களையும் அனுபவிப்பதைத் தவிர வேறு எதையாவது நாடினுயானல் நீ ஒரு ஏமாளி தான், நீ அடைவது ஏமாற்றமேதான். ஏனெனில் இவ்வுலக வாழ்வு முழுதுமே துன்பமயமானதுதான். எப்பக்கத்தில் பார்த்தாலும் இடைஞ்சலும் இன்னல்களும் நிறைந்தது தான் இவ்வாழ்க்கை.

தூய்மை வளர்ச்சியில் ஆன்மத் தேட்டத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு உயரமாக ஒருவன் முன்னேறுகிருனே அவ்வளவுக்கு அவ்வளவு கடுமையானதாக அவனுக்குத் துன்பங்களும், சோதனைகளும் தன்னை இறைவன் புறக்கணித்துவிட்டான் என்று உணரும் துயரமும் ஏற்படுவதை அவன் காண்கிருன். ஏனெனில் இறைநிலையின்பால் அவனுக்கு அதிக ஆர்வம் ஏற்படுவதற்கு ஏற்றபடி அந் நிலையை அடையாமைபற்றி அவனுக்கு ஆற்ருமை பெருகுகிறது.

8. பலவிதத்திலும் துன்புற்ற போதிலும் இத் தெய்வ நாட்டம் உள்ள தூயோன், உற்சாகம் தரும் ஆறுதல் பெருமல் போவதும் இல்லை. ஏனெனில் தானேவிதித்துக்கொண்ட தன்னடக்கக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இருப்பதாலும் தனது தியாகத்தாலும் தனக்கு மிகுந்த நலன் விளைகிறது என்பதைக் காண்கிருன்.

தாஞகவே தன்னை இறைவனுக்காகத் துயருறும் நிலைமைக்கு உட்படுத்திக் கொள்வதால், அவன் காண்பது என்ன? அவன் தனக்கு நேரும் துயரங்களின் பளுவும், சோதனைத் தொந்தரவுகளும் தனக்குத் தெய்வீக ஆறுதலைக் கொடுப்பனவாக மாறுவதைக் காண்பான்.

இந்த ஊன் உடல் எவ்வளவுக்கு எவ்வளவு இறைவற்காக மெலிகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆன்மீய வளர்ச்சி உள்ளுக்குள்ளே இறை அருளால் உரம்பெறுகிறது.

இறை அருளுக்காகவும் தூய்மைக்காகவும் சேவைக்காகவும் எவ்வளவுக்கு எவ்வளவு துயரங்களையும் வறுமையையும் விரும்பி ஏற்றுக்கொள்கிருேமோ அவ்வளவுக்கு அவ்வளவு இறை அருளைப் பெறத் தகுதியுடையவராவோம் என அற வாழ்க்கையாளன் நம்புகிருன்.

ஆதலால் தன் வாழ்க்கை முறையானது, உண்மைத் தூயோர் அல்லது உண்மை உலகச் சேவையாளரது வாழ்க்கைக் கொடுமை அனுபவத்தை ஒட்டி இருக்கவேண்டும் என்ற விருப்பத்தால், தான் துயரமும் இன்னல்களும் இல்லாத வாழ்க்கையை விரும்பமாட்டான். இறை அருளுக்காக அத்தகைய கடுமையான வாழ்க்கையைப் பெறக் கொடும் சோதனைகளையும் நல்குரவையும் விரும்புவதிலேயே சில சமயங்களில் மிகவும் ஆறுதல் அடைகிருன்.

இது மனிதனது சொந்த ஆற்றலால் பெறும் உறுதியன்று. இவ்வுள்ளத் திண்மை இறை அருளால் எழுவது. அவ்வரிய அருளால்தான் 'கடுங்காற்றுக்குக் கால் ஊன்றி நிற்கத் திறன் அற்ற இத் துச்ச ஊன் உடல்' செயற்கரிய செயல்கள் செய்யக் கூடியதாயும் செய்து காட்டுவதாயும் இருக்கிறது. அவ்வான்மீக உள்ளக் கிளர்ச்சியால், அதாவது இறை அருளின் ஆர்வத்தால், மக்கள்பால் உள்ள மட்டற்ற அன்பு உணர்ச்சியால் (சேவையில் பெறும் இன்பத்தால்) இயல்பில் எதைக்கண்டு, எந்தக் கடும் அனுபவங்களையும் நிலைமைகளையும் கண்டு அஞ்சி ஓடுகிருேமோ, அவற்றை இன்புடன் எதிர்கொண்டு வரவேற்கவும், அக்கஷ்டங்களை, அத்துன்பங்களை விரும்பி நிற்கவும் முடிகிறது.

9. பிறர்க்காகக் கடுங் கொடுமைகளைத் தாங்குவதும், பிறர்நலங் கருதித் துயரங்களை விரும்புவதும், உடலை வாட்டி வதக்கி முற்றும் அடங்கச்செய்வதும், பட்டம், பதவி, கௌரவத்தைத் துறந்து ஓடுவதும், மக்களின் தூற்றுதல்களையும் இகழ்ச்சிகளையும் விருப்புடன் பொறுப்பதும், தன்னைத்தானே துச்சமாகக் கருதுவதும் தான் இழிவாக நடத்தப்படவேண்டும் என்று விரும்புவதும் எல்லாவிதக் கேடுகளையும் துயரங்களையும் இன்னல்களையும் அமைதியோடு பொறுத்துக்கொள்வதும் இவ்வுலகில் எவ்விதச் செழிப்பான வாழ்க்கையையும் விரும்பாமல் இருப்பதும் சாதாரண மனித இயல்பு அல்ல.

இத்தகைய அசாதாரணச் செயல்களைச் செய்ய உன்னிடமே ஆற்றல் இருப்பதாக இறுமாந்து எண்ணிக் கொண்டிருந்தாயானல் அச் செயல்கள் ஒன்றையும் செய்ய முடியாதவனுகப் போவாய்.

ஆனல் இறையருளை நம்பி இருப்பாயாயின் தெய்வீக உள்ளத் திண்மையைப் பெறுவாய். அந்நம்பிக்கையால் அவ்வுறுதி பெறுவதுடன் கூட உலகும், உடலும் கண்டிப்

பாய் உனது ஆணைக்கு அடிபணியச் செய்யப் படும்.

10. பிறர்க்கென வாழ்வதற்காகத் துயரப் படுதலை மகிழ்ந்தேற்றுத் தன்னம்பிக்கையை உன் ஆயுதமாகக் கொள்வாயானல், நீ உனது எதிரியான மாயையின் கவர்ச்சிக ளுக்கு அஞ்சி இருக்கவேண்டியது இல்லை.

உலக மக்களின் நலத்திற்காகத் தங்களது உடல், பொருள், ஆவிகளை முற்றிலும் ஒப்ப டைத்த தியாக மூர்த்திகளைப் போல, இறை பணியை ஆண்மையுடன் ஆற்றும் நிலையில் உன்னை வைத்துக்கொள்.

துன்பம் நிறைந்த இந்த உலக வாழ்விலே பல தொந்தரவுகளையும் பலவகையான கஷ்ட நஷ்டங்களையும் பொறுத்துக்கொள்ள உன் னைத் தகுதி செய்துகொள். ஏனெனில் அற வாழ்வை நாடும் அன்பனே! நீ எங்கு இருந் தாலும், நீ எங்கு சென்று உன்னையே மறைத் துக்கொண்டு உறைந்தாலும் நிச்சயமாக இவ்வின்னல்களையே அனுபவத்தில் காண் பாய்.

அப்படி இருப்பதுவே இயற்கை. அதற்கு எவ்வித பரிகாரமும் கிடையாது. அத் தொந் தரவுகளையும், துயரங்களையும் நீயே பொறுத் துக்கொள்வதைத் தவிர அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள எவ்வழியும் கிடையாது.

இறைஅருள் உடையோனுகவும், இறை பணி நிற்கும் பேறு பெறவும் நீ விரும்பினல் தியாக மூர்த்திகளின் துன்பானுபவங்களை மனப்பூர்வமாகவும் அன்புடனும் ஏற்பாயாக.

உனக்கு வேண்டிய வசதிகளுக்கும் ஆறு தல்களுக்கும் நீயாக நாடி முயலாமல், அவற்றை அளிப்பது இறைவன் பொறுப் பென விட்டுவிடு. இறைவன் அவ்விஷயத்தில் அவன் திருவுளப்படி செய்துகொள்ளட்டும்.

ஆனல் இடையூறுகளையே எப்போதும் எதிர்பார்க்கவும், பெறவும், பொறுத்துக் கொள்ளவும், அனுபவிக்கவும் உன்னை உறுதி யாகத் தயார் செய்துகொள். அவைகளையே மிகச் சிறந்த ஆறுதல்களாகக் கருது. ஏனெ னில் நீயே அவைகளைப் பொறுத்துத் துன்புற வேண்டியது. தவிர்க்க முடியாதது ஆயினும் இப்போதைய இந்த இடையூறுகளின் கஷ் டத்தைப் பின்னல் நீ அடையப் போகும் ஆண்டவனது அருளின் பெருமைக்கும் இன் பத்திற்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் அளவில் மிக அற்பமானதேயாகும்.

11. ஆண்டவன் அருளுக்காகவும் தூய் மைக்காகவும் துயரங்களை விரும்பி இனிமை யோடு ஏற்கும் நிலையை அடைந்து விட் டாயானல், நன்னிலை எய்தி விட்டாய் என்று நினைத்துக் கொள். ஏனெனில் நீ இம்மண் ணுலகிலேயே சுவர்க்கப் பேற்றை அடைந் தவனுவாய்.

துன்பத்தைப் பொறுப்பது உனக்குப் பெருங் கஷ்டமாக இருக்கும் வரையிலும், துனபங்களைக் கண்டு துடித்து நீ ஓட நாடும் வரையிலும் நீ அமைதியற்ற அவல நிலையில் தான் இருப்பாய். துயரங்களில் இருந்து தப்பி ஓடும் நாட்டம் நீ எந்நிலைக்கு எங்கு சென்றுலும் உன்னைத்துரத்திப் பின்பற்றி வந்து கொண்டேதான் இருக்கும்.

12. அறவாழ்க்கை அன்பனே! நீ கண் டிப்பாய் அனுபவிக்க வேண்டியவற்றிற்கு—அதாவது துன்பங்களை ஏற்பதற்கும், இறப்ப தற்கும், உறுதியுடன் தயார் செய்து கொள். அப்படிச் செய்து கொண்டாயானல் விரை வில் நலத்தைக் காண்பாய். நீ அமைதியை யும் அடைவாய்.

தெய்விகச் சான்ருேர் சிலர் அடைந்துள்ள உயர் யோகநிலை எய்திய போதிலும் அதனு லேயே துன்பத்திலிருந்து விலகியவனுக மாட் டாய். பரவச நிலைபெற்ற திரு. பால் முனிவ ருக்கும் கூட இறைபணிக்காக மேலும் எவ் வளவு பெரிய கடும் துன்பங்களைப் பொறுத் துக் கொள்ள வேண்டும் என்பதை ஏசு நாதரே காட்டுவதாகக் கூறியுள்ளார்.

ஆதலால் நீ இறைஅருளை நாடி விரும்பினு லும், இடைவிடாது இறைபணி செய்வதானு லும், உனக்குத் தொடர்ச்சியாகத் துன்பம் அனுபவித்துக் கொண்டே இருப்பதைத் தவிர வேறு வழியே இல்லை.

13. ஆ! இறைபணிக்காக அதாவது மன் னுயிர்ப் பணிக்காகத் தியாகம் செய்வதற்கும் துன்பப்படுவதற்கும் உனக்குத் தகுதியும் வாய்ப்பும் கிடைப்பது எவ்வளவு அரிது!

உனக்கு எவ்வளவு சிறப்பான பெருமை கிடைக்கும்! ஆண்டவனுடைய அருள் தூதர் களுக்கெல்லாம் எவ்வளவு மகிழ்ச்சி உண்டா கும்! உனது அண்டை அயலாரை எவ்வளவு மேல்நிலைக்கும் பெருமைக்கும் உயர்த்தும்!

மனிதர்கள் அனைவரும் பிறரைப் பொறு மையாக இருக்கும்படி புத்திமதி கூறுவதை எங்கும் காண்கிருேம். ஆனல் மனம் ஒப்பிப் பொறுமையுடன் துன்பங்களைப் பொறுப் போரைக் காண்பது மிக மிக அரிதே!

இறைவற்காகவும், பொது நலப்பணிக்காக வும் துயரங்களை மகிழ்ச்சியுடன் நீ ஏற்றுக் கொள்வது நல்ல முறையே. ஏனெனில் அழி யக்கூடிய உலகானுபவங்களுக்காகப் பலர் மிகப்பெரும் கொடுமைகளைச் சகித்துக் கொள்கிறார்கள்.

14. அறவாழ்க்கை அன்பனே! நீ மிகக் கண்டிப்பாகத் தியாகத் தூய வாழ்வு அதா வது இறக்கும் வாழ்வாகிய தற்பலி வாழ்வே வாழவேண்டும் என்பதை உறுதியாக உணர்ந்துகொள். ஒருவன் எவ்வளவுக்கு எவ்வளவு தனக்குத் தானே இறந்தவன், ஆகிறானோ அவ்வளவுக்கு அவ்வளவு அவன் இறைஅருளில் வாழத் தொடங்குகிறான்.

இறைபணிக்காகத் துயரங்களைப் பொறுக்க இசைந்தாலன்றி, எம்மனிதனும் ஞான வாழ் வைப் பற்றிய உண்மைகளையும் அறிந்து கொள்ளத் தகுதியுடையவன் ஆகான்.

இறைஅருளுக்காக மகிழ்ச்சியுடன் துன் பங்களைப் பொறுத்துக் கொள்வதை விட, நலம் தரும் மேலான பேறு உலகில் உனக்கு ஒன்றும் கிடையாது. அதைவிட ஆண்டவ னுக்கு உகந்தது வேறொன்றும் இல்லை.

நீ விரும்பித் தேர்ந்து எடுத்துத் துய்க்கும் வாய்ப்பு உனக்கு இருந்தால், பல ஆறுதல் களையும் வசதிகளையும் நாடுவதை விட்டுவிட்டு இறை அருளுக்காகக் கண்டிப்பாய் நல்குர வையும் துன்பங்களையும் துய்க்கவே விரும்பு. ஏனெனில் அத்தகைய வாழ்வாலே நீ தூய தியாக மூர்த்தியைப் போலவும் ஆண்டவன் அருள் தூதர்களைப் போலவும் வாழ்ந்தவன் ஆவாய்.

மற்றும் நமது உண்மைத் தகுதியும் நல மும், ஆன்மீகப் பயிற்சியின் திறமையும், பல வசதிகளையும் இன்ப அனுபவங்களையும் பெற்று வாழ்வதில் இல்லை. அதற்கு மாறு கப் பெரும் துன்பங்களையும் கொடுமைகளை யும் முழு மனதுடன் பொறுமையுடன் துய்ப் பதிலேயே இருக்கிறது.

15. மனிதனது உண்மை நலத்திற்கும் விடுதலைக்கும் துன்பம் துய்ப்பதைத் தவிர, வேறு உயர்ந்த வழி இருக்குமானால், உலகம் போற்றும் உத்தமர் அனைவரும் தங்களது அறமொழிகளாலும் வாழ்க்கை முறையா லும் அவ் வழியைக் காட்டி இருப்பார்கள்.

இறைவன் இணையடி அடையவும், இறை பணி ஆற்றவும், உண்மை விடுதலை பெறவும் விரும்பிய சீடர்களுக்கும் விரும்புவோர் அனை வருக்கும் உலக குரவர் தெளிவாகக் கூறு வது :—

"என்னைப் பின்பற்றி வாழ எவனேனும் விரும்பினால், அவன் தனக்கென வாழாமை யைக் கடைப்பிடித்து, தனக்கு நேரும் இன் னல்களை மகிழ்ந்தேற்று, என்னைப் பின் தொடரட்டும்."

ஆதலின் சமய நூல்கள் அனைத்தையும் தேடி அலசி அலசிப் பார்த்துப் படித்து உணர்ந்து கடைசியாக நாம் கட்டும் முடிவா வாவது :— பலப்பல துயரங்களைப் பொறுத் தல் வாயிலாகவே நாம் இறைவனுடைய திரு நாட்டிற் புகல் வேண்டும்" என்பதே.

முயற்சியா, முயற்சியின்மையா!

(ஜிரால்ட் ஹியார்ட் என்பவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையைத் தழுவியும் மொழிபெயர்த் தும் எழுதியது)

தத்துவம் எப்போதும் உள்ளது போல, சமய சம்பந்தமான வழக்குகளும் எப்போ தும் இருந்துவந்துள்ளன. இவ்வழக்குகட் குள்ளே, ஞானவாழ்க்கைக்கு முயற்சிவேண் டுமா? முயற்சியின்மை வேண்டுமா? எனும் வழக்குப்பற்றி உண்டாகும் கட்சிமனப் பான்மையும், ஒரு கட்சியார் மற்றொரு கட்சி யாரைப் பற்றித் தவறான கருத்துக்களைக் கொள்ளுதலும் வேறொன்றைப் பற்றி எழுப வையினும் அதிகமாக உள்ளன. உலகமெங் கும் பரந்துள்ளது இவ்வழக்கு; மனிதர் வழக்காடவும் கேள்வி கேட்கவும் தொடங் கிய காலமுதலே இது இருந்துவந்துள்ளது. தாக முள்ளவர்க்கெல்லாம் தண்ணீர் 'பணஞ் செலவழியாமலும் விலை கொடுக்காமலும்' கொடுக்கப்படும் எனப் பைபிளில் (கிறிஸ்தவ வேதத்தில்) ஓரிடத்துக் கூறப்பட்டுள்ளது; முத்தியை ரொக்கங் கொடுத்து வாங்குதல் எனும் கருத்தை இது கண்டிக்கிறது என் பதே யொழிய, ஞானமும் முத்திப்பேறும் விலையின்றிப் பெறலாம் என்பதே அதன் பொருளன்று.

முதன் முதலாக நாம் அறிந்து கொள்ள வேண்டிய வேறுபாடு இதுவே. நமது பணத்தின் உதவியால் முத்தியை நாம் விலைக்கு வாங்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் நாம் செய்யும் தன்னலப்பலிக்கும் முத்திக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்பதும் உண்மையன்று. காந்திமஹான் ஒரு நண்பரிடம் கூறிக்கொண்டே இருந்தது போன்று, "தியாகம் முதலிலே! அது இன்றி ஞான ஒளி இல்லை!"

இவ்வழக்கு வேறொரு திசையில் திரும்பத் தொடங்கியது, பாலிபுத்த மதம் தலையெடுத்தது முதலாக; ஆயினும் அப்புதிய கருத்தும் உலகமெங்கும் பரந்துள்ளதே யாம். புத்தரின் வாயினின்றெழுந்ததாகத் தென்னாட்டுப் பௌத்தர் கூறும் வாக்கியம் ஒன்றுக்குப் பொருள்: "நீங்கள் உங்கட்கே தீபங்களாகத் திகழுங்கள்." தானே தன்னை ஒருவன் விடுவித்துக் கொள்ளவேண்டும் என்பதே இதன் கருத்து என அறியப்பட்டது. இதன் உண்மையான பொருள் 'தானே (ஆத்மாவே) தனக்கு (ஜீவனுக்கு) வழித்துணையாக ஆகட்டும்' என்பதே—இதனை இப்பொழுது பலரும் ஒப்புக்கொள்கின்றனர். இக்கொள்கை கிறிஸ்தவ மதத்தில் ஒரு வகுப்பினர் போதித்து வரும் 'உள்ளொளி' எனும் கொள்கையை ஒட்டிவருவதாகிறது. 'நீங்கள் உங்கட்கே தீபங்களாகத் திகழுங்கள்' என்ற மொழிபெயர்ப்பையே மிக மிக நீண்ட காலமாகச் சில கட்சியார் ஒப்புக்கொண்டு வந்தனர் என்பதும் உண்மையே; இதைச் சுய முயற்சிக் கொள்கையெனப் பெயரிட்டு அழைத்தமையால், இது மறுப்பை உண்டாக்கலாயிற்று. மிக விரைவில் மக்கள் ஒரு பேருண்மையைக் கண்டறியலாயினர்; அதற்கு இக்காலத்துப் பிரெஞ்சு மன நூலறிஞர் ஒருவர் 'பின் திருப்பப்படும் முயற்சி விதி' எனும் பொருத்தமான பெயரை அளித்தனர். நமது முயற்சி அதிகரிக்கும் அளவுக்கு உள் நிகழும் எதிர்ப்பும் மிக்க பிடிவாதமாக எழும். பின்பு வர வரக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் உண்மையாவது: நமது மனத்து மேலாக எழும் சங்கற்பத்தால் நாம் இடும் கட்டளை ஒவ்வொன்றையும் நமது மனத்திலே ஆழ்ந்த பிரதேசத்திலுள்ள (அடக்கியாளும்) சக்திகள் நிறைவேற்றாது எதிர்த்து நிற்கும் என்பதே. உதாரணமாக, நாம் தூங்கவேண்டும் என்று சங்கற்பித்தால், நாம் அதற்கு மாறாக நன்கு விழித்திருப்போம். மருத்துவர் 'நும் கண்ணைத் திறந்து வைத்துக் கொள்ளும்' என்று சொல்லவும், நாம் கீழ்ப்படிய முயல்வோம்; ஆனால் நம் கண்கள் மூடிக் கொள்ளும். 'நும் நாக்கைக் கீழே தணித்து வைத்துக் கொள்ளும்' என்றால், அது உயரக் கிளம்பி, நமது தொண்டையை அடைக்கும். "விழுங்கும்" என்றால், விழுங்க முடியாது விக்கிக் கொள்ளும் நிலையை அடைவோம். "தசைகளைத் தளர்த்தும்" என்றால் நமது தசைகள் சுருங்கி விறைப்படையும்.

இந்த ஈதிபாதையினின்று (தரும சங்கடத்தினின்று) தப்பிக்க எளிதான வழியாக இக்காலத்தே மக்கள் "நமது மனதைக் கவனியாது தனியே விட்டுவிடல் நன்று' என்ற கொள்கையைப் போதித்து வருகின்றனர். நமது ஜீரணத்தையும், மூச்சுவிடுதலையும், நெஞ்சின் (இருதயத்தின்) துடிப்பையும் பற்றி நினைப்பதனால், அவற்றை நாம் தலைகீழாக்குகிறோம். அவற்றை விட்டு நம் மனத்தை வேறுவழியிற் செல்லவிடின், அவை ஒழுங்காக நடக்கும். ரைஸ் புரோக் என்னும் வடஐரோப்பிய ஞானியார் இம்மாதிரியான தவறான கொள்கையைத் தமது ஆரம்ப வாழ்க்கையிலே கண்டு கொண்டனர். ஞான நெறியிற் செல்ல விரும்பின சில வகுப்பினர் அக்காலத்தில் எவ்வித முயற்சியையும் எவ்வித அடக்கத்தையும் கண்டித்து வந்தனர்; ஆனால் எங்குந் திரிந்துகொண்டு ஊரார் இகழும் அளவிற்குக் கூக்குரலிட்டு வந்தனர். தமது இச்சைகளை நிறைவேற்றியும், முயற்சியின்றிய அமைதியெனும் பெயரால் ஓயாது அற்பச் சண்டைகளை உண்டாக்கியும், வேலை செய்ய மறுத்தும் வரலாயினர். காரணம் யாதெனில், அமைதியைப் போதிப்பாரில் அமைதியாயிருப்பார் அருகியே இருப்பார் என்பது ஓர் இனிய உண்மையாதலே. தாமே தமது மோனத்தைப் பற்றி அடிக்கடி விளம்பரம் பண்ணிவந்த கார்லைல் என்னும் பெரியாரைப்பற்றி மார்லி என்ற ஓர் அறிஞர் கூறுவது கருதத் தக்கது; அவர் கூறுவதாவது: "தமது மோனம் எனும் கொள்கையைச் சுருங்கக் கூற நினைத்தவர் பதினெட்டுப் பெருத்த புத்தகங்களிற் கூறி முடித்தார்". வேறோர் அமைதிக் கொள்கையாளர் சில ஆண்டுகள் போதித்த பின்பு பல்லாயிரக்கணக்கான கடிதங்களையும் ஒன்றிரண்டு நூல்களையும் விட்டுச் சென்றார்.

பேச்சுக்கடங்காத ஒரு பொருளைப்பற்றி இவ்வாறு மிகுதியாகப் பேசும் வழக்கத்திலிருந்து நாம் நிச்சயமாக ஊகிக்கக் கூடியது ஒன்று உள்ளது; அது யாதெனில், அமைதியைப் பற்றிப் பேசுவோர் கருதிய அளவிற்கு மிக மிக அதிகமாக ஒரு சங்கடம் இவ்விஷ

யத்தில் அமைந்திருப்பதுதான். "நீந்துவாயாகில், குளிர்ச்சியால் உன் தசைகள் சுருங்கியே போகும்" என்பார் ஒரு பக்கம் இருக்க, "நீந்தாதிருப்பாயாகில் நீ அமிழ்ந்து போவாய்" என்பார் வேறொரு பக்கம் இருக்க, இவ்விரண்டுக்கும் இடையே இருதலைக் கொள்ளி எறும்பென இடர்ப்படுவார்க்கு இக்காலத்தே ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதன்றோ? அதாவது, விஷயத்தைத் தற்கால பாஷையில் முரண்பாடின்றி வேறு வழியில் உரைக்கலாம். இம்முறை பௌத்த மதத்தின் ஆரம்ப கால முதலாக வேனும் அறியப்பட்டுள்ளது. கௌதமரே "அறத்தை (புத்த தருமத்தை)ப் பற்றிய அறிவு இருப்பினும், தியானமின்றி ஞானம் கைகூடாது" என்று விரித்துரைத்ததாகச் சொல்லுவர். தியானம் என்பது யாது? தற்கால பாஷையிற் பேசுவோமாயின், மூளையின் நடுப் பகுதியோடு—சங்கற்பத்திற்கும் உணர்ச்சிப் பெருக்குக்கும் உறைவிடமான அப்பகுதியோடு—சம்பந்தப் படுதலே எனல் வேண்டும். முன் ஒரு காலத்திலே யுக்தி வெளியுலகை ஆளப் பயன்படும் எனினும் உள்ளுலகை (மன உலகை) ஆளப் பயன் படாது என்றனர் அறிஞர். நமது உணர்விற்கு வாராதுள்ள மனதின் கீழ்ப் பகுதியிலிருந்து திடீரென வெடித்தெழும் உணர்ச்சியின் வேகத்தினால் நம்மிடத்து ஒட்டிக் கொண்டிருக்கும் பழக்கங்களைத் தாற்காலிகமாயாவது தகர்த்தெறியும் வழியை வேறோர் அறிஞர் போதித்து வந்தனர். புற இயற்கையிலே காணும் நிகழ்ச்சிகளினின்றும் வடித்தெடுத்த முறைகளும் விதிகளும் மனித இயற்கையை அடக்கியாளச் சிறிதும் பயன்படா என்று வேறு சிலர் எதிர்த்துரைத்தார். ஆனால் இந்த எதிர்ப்பு சரியானதன்று. விதிகளும் முறைகளும் பயன்தரவே செய்யும்; முயற்சி சாதுரியமாக (திறமையோடு) செய்யப்படுமாயின், பயன் வந்தே தீரும். ஆதலின் முயற்சி செய்தல் இயலும், செய்தலும் அவசியமே. பயிற்சியைப் பெறுவது ஆவதொன்றே, இன்றியமையாததுமாகும். குழந்தை பெறுதல் சம்பந்தமாகவும், ஆகாய விமான சாரதிகளைப் பழக்குதல் சம்பந்தமாகவும் இரு பெரிய மனநூற் புலவர் நிலை நாட்டியுள்ள உண்மை இப்போது உள்ளது: அதாவது, சிற்சில விவரமான குறிப்பிட்ட முறைகளால் நடுமூளையைப் பயிற்றலும் இயலும்; அதுவே ஆழத்திலுள்ள சங்கற்ப சக்தியைக் கிளப்ப ஒரே வழி. 'என் முயற்சி அதிகமாகும் அளவுக்கு, எனது வெற்றி குறைந்து வருகிறது' என்ற ஏமாற்றத்தைத் தீர்க்க அவ்வழி உள்ளது. இம்முறைகளினால் சுறுசுறுப்பாக்கப்படும் 'நான்' என்பது ஆணவம் (அஹங்காரம்) என்பதினும் பெரியது, மிக்க மாண்புடையது.

நம்மை அடக்கியாளவல்ல சக்திகளை வெளிக் கொணர்வதற்குரிய முறைகளைப் பல விதமாகப் பலர் கூறலாம். ஆயினும், அவையனைத்திலும் ஒரு பொதுவான பகுதி உள்ளது; அதாவது, ஆழத்திலுள்ள மனதை (நம்மை அடக்கியாளும் மனப்பகுதியை) ஒரு தெளிவான நியாய முறையாலே காப்பாற்ற முடியாது, கிளப்பவும் முடியாது; யுக்தி பூர்வகமான வாதத்தாலும் அதனை வசப் படுத்த ஒண்ணாது. திரும்பத் திரும்ப அடிக்கடி ஒன்றைச் செய்துவருதலால்தான் மனதில் ஒன்று பதிகிறது; பலமுறை சொல்வதால் மனம் ஒரு பாடத்தைப் 'பாராமற் படிக்கக்' கற்றுக் கொள்ளுகிறது. ஆதலால் கிரியையே சிலர்க்கு வழியாகலாம். உணர்வுக்கு அதீதமான நிலையின் முழுக்கவனத்திற்காக அறிவிற்கு அதீதமான நிரூபணமே கிரியை. 'இது அன்று' எனும் நேதி மார்க்கத்தாலே விவேகம் பிறர்க்கு வழியாகலாம்.

மிக சாதாரணமான வழியாவது ஜெபமே, மந்திர உச்சாரணமே. இவ்வழியை முற்காலத்திய ஞானியர் பலர் போற்றியுள்ளனர். 19-ம் நூற்றாண்டில் எழுதிய இரு நூல்களிலும் இந்த ஜெப முறை வற்புறுத்தப் பட்டுள்ளது. சிந்தனை நடக்கும் நிலையிலே ஓயாது ஜெபம் செய்து கொண்டிருப்பதால், ஜெபம் தானாக நிகழும் தன்மையை அடைதலைப் பற்றி விரித்துக் கூறுவன இந்நூல்கள்.

எப்பொழுது எப்படி இது நிகழ்கிறது? இதனால் விளைவன யாவை?

இதற்கு இடைவிடாத சமார்த்தியத்தோடு கூடிய முயற்சி வேண்டும் என்பது திண்ணம். சிந்தனை நிகழும்போது அந்தத் தாரையிலே 'மந்திர மொழியை' 'மனத்தின் பின் பக்கத்திலே' ஊட்டல் வேண்டும்; எப்போது எனில் மேற்புற மனதிலே ஓதுதல் நின்று விட்ட உணர்ச்சி உண்டாகும்போது என்க. (இதைச் செய்தற்கு மிகச் சிறந்த காலங்களாவன, விழிக்கும் போதும், உறங்கச் செல்லும் போதும், நடு நிசிக்குப் பின்னுள்ள ஒன்றிரண்டு மூன்று நான்கு மணிகளிலும். இவ்வாறு பழகுபவன் தூக்க மின்மையைப் பற்றிப் புகார் கூறுவதை நிறுத்தி விடுவான்.) இப்பயிற்சியில் பொழுதை அதிகம் செலுத்தும் அளவிற்கு, சிந்தனை நிலையிலுள்ள மனம் அதிக விரைவாகவே அந்த மந்திரத்தை ஒப்

புக் கொண்டு தன்னதாக்கிக் கொள்ளும் காலம் வந்துசேரும். அப்போது ஒரே கருத்திலே ஊன்றி நிற்க மனம் மகிழ்கின்றது.

இவ்வாறு ஜெபம் தானாக நிகழும் நிலையை அடையப் பொதுவாக 'உலக வாழ்வில்' உள்ள ஒருவனுக்கு, சாமர்த்தியமாக ஊட்டும் முறையைச் சில ஆண்டுகளேனும் பழக வேண்டும்; உறங்கச் செல்லும் பொழுதுகளைப் பயன்படுத்தாவிடிலோ ஆண்டுகள் இன்னும் பல வேண்டியிருக்கும்.

இதனால் விளையும் பயன் யாது? முயற்சியின்றி இடைவிடாது பிரார்த்தனை நிகழ்தலே.

இம்மாதிரியான பழக்கத்திலே புதுமையானதோ சிரமத்தை யளிப்பதோ யாதென்றும் இல்லை. அடிப்படையிலே இம்முறை எல்லாச் சித்திரக் கலைஞராலும் தமது பயிற்சிக்காக எப்போதும் கையாளப்பட்டு வந்த ஒன்றே யாகும். அம்மாதிரியான முயற்சியை வாழ்க்கைக்கலைப் பயிற்சிக்கும், ஞானவாழ்க்கைப் பயிற்சிக்கும் பயன்படுத்தும்போது மக்களுடைய மனதில் ஒரு குழப்பம் உண்டாயுள்ளது. இது வார்த்தையின் பொருளைப்பற்றி வந்த ஒரு குழப்பமே. 'முயற்சி' யென்பதற்கு 'சலிப்பு' என்று பல முறை பொருள் கொள்கின்றனர்; அது போன்றே, 'விடுவித்தல்' என்ற மொழியை உபயோகிக்க வேண்டிய இடத்துத் 'தளர்த்து' என்ற மொழியை உபயோகிக்கிறோம். வாழ்க்கை முறை இன்னது என்பதையும், மனித உடலைப் பெற்றிருத்தலின் பயன் இன்னது என்பதையும் அறிந்தவர்க்கு, யாதோ ஒரு குறிப்பிட்ட பண்டைய 'அளவு' நிலைக்கு மீளுதல் என்பது நமது நோக்கமல்ல என்பது விளங்கும். வாழ்வாவது வளர்ச்சியே. 'தளர்த்து' என்றால் 'கீழே கிடத்தல்' என்பது பொருள்; ஆனால் 'விடுவித்தல்' என்றால் 'முன் செல்லல்' 'சுவாதினமாகச் செல்லவிடல்' என்பது பொருள். முயற்சி யென்பது சோர்வை உண்டுபண்ணத் தக்கதாக வேண்டும்; ஆனால் பலவீனத்தை யுண்டு பண்ணுதாகும். உலாவுதலையே பயிற்சியாகக் கொள்பவன் ஒவ்வொருவனும் இவ்விஷயத்தை உணர்வான்: அதாவது, சிரமத்தினால் உண்டாகும் அழிவைக் காட்டிலும் அதிகமாகத் தசையை வளரச் செய்ய வல்லதொரு சிறந்த முறைப் பயிற்சி உண்டு. சிரமம் கொடுக்கும் போதெல்லாம். மெலிவும் கூட நிகழும். இன்னும், நம்மால் முயன்று பெறுதற்குரிய ஓர் இலக்ஷியம் இருக்கும்போது, சோர்வு என்பதை வரையறையின்றி நெடுங் காலத்துக்குத் தள்ளிவைக்கக்கூடும் என்பதையும் நாம் அறிவோம். அலுப்பும் அருவருப்பும் சோர்வும் உண்டாகும் காரணம் யாதெனில், அந்த இலக்ஷியத்திற்கு அவ்வளவு பாடுபடல் (விலை கொடுத்தல்) அவசியமன்று என்ற உணர்ச்சிதான். கவனம் என்பது மனிதனிடத்துள்ள மேலான சக்தி; அதன் பொருளாவது, ஒன்றை நோக்கி நினைவு கூர்தல் என்பது, அதாவது, மனம் ஒரு குறிப்பையடைதற்காக இழுபடுகின்றது என்பது. சரியான அளவிற்கு இம்மாதிரி இழுபடுதல் என்பதும் உண்டு. தளர்ந்த நிலைக்கும் இழுபட்ட விறைப்பு நிலைக்கும் இடையே பல மூட்டும் நிலை என்பது ஒன்று உண்டு; அந் நிலைதான் இலக்ஷியமாகிய கவன நிலை. நமது பழைய திறமைக்கு மிஞ்சிய ஒரு பயிற்சியை நாம் கைக்கொள்ள நேரும்போது, நமது மனம் ஒருவித 'விழிப்புற்ற முயற்சியற்ற நிலை'யில் இருத்தல் வேண்டும் என்பார்; அப்போது நமது திறமை முன்னினும் பெருகி, வெற்றியை நமக்குத் தரும், என்பார் ஒரு கலைநிபுணர். சமய வாழ்க்கையிலே இம்மாதிரியான 'விழிப்புற்ற, முயற்சியுற்ற நிலை'யே, ஆன்மா எதிர்பார்த்து நிற்கும் நிலையாகும். மந்திரம் ஓதுதல் என்பது இடைவிடாது கதவைத் தட்டுதலாகும். சமுத்திரத்தின் ஆழத்தை அறிவதற்காக ஒரு ஒலியைக் கடலிலே உண்டுபண்ணி, அதன் எதிரொலி கடலின் தரையிலே பட்டு மீளுவதைக் கவனித்து வருவார்கள்; அதுபோல் இம்மந்திர ஜெபம் என்பது ஞான சமுத்திரத்தின் ஆழத்தை ஆராய்வதற்காக எழுப்பும் ஒலியாகும்.

தொடர்ந்து மந்திர ஜெப ஒலியை உண்டு பண்ணி வருவோம்; சில ஆண்டுகட்குப்பின் நமது காதிலே எதிரொலி வந்து வீழும்; நாம் எழுப்பும் அலைக்குப் பதில் அலை நம்மிடம் வந்து சேரும். நமக்குப் பதில் வருவது நிச்சயம்தான். தேடினால், கதவைக் காண்பது உறுதி. கதவைத் தட்டினால் கதவு திறக்கப்படும் என்பதும் உண்மை. வேண்டினால், நமக்கு மிகவும் தேவையானது அளிக்கப்படும்.

ஆனால் நாம் உண்மையாகப் பாடுபடுகிறோமா என்பதை ஆராய்ந்து தீர்ப்புச் சொல்வது நமக்கே இயலாது; நமது மனம் நமது தொந்தரவைப் பொறுக்க முடியாமல் நமக்கு இயைந்தவாறு பொய்யான தீர்ப்பையே கூறும். அடிப்படையிலே நம்மிடம் ஒழுக்கத் தாழ்வும் சோம்பலும் குடிகொண்டுள்ளன; பல ஆண்டுகளானும் இடை

விடாது முயற்சி செய்யும் அளவிற்கு உண்மையான உழைப்பும் முழுக் கவனமும் நம்மிடம் ஏற்படும்வரை, நாம் வேண்டுவதாகப் பாவனை செய்வதன்றி மெய்யான நாட்டம் கொள்வதில்லை என்பதே முடிவு. எவ்வளவு காலம் வேண்டிக்கொண்டே யுள்ளோம் என்பதை முழுவதும் மறக்கும்வரை, இடைவிடாது சலிப்பின்றி முயற்சி செய்யும் போதுதான், நாம் வேண்டும் பொருளைப் பரம்பொருள் நமக்கு அருளும். "இந்த மரத்தில் எத்தனை இலைகளோ அத்தனை பிறவிகட்குப்பின் நீ காட்சி பெறுவது உண்மை" என்பதைக் கேட்ட மாத்திரத்திலே ஆனந்தக் கூத்தாடின ஒரு சாதகனது நிலை வேண்டும். அவ்வாறு செய்யும் நிலை நமக்கு வரும்போது தான் நற்காலம் வரும், நமது முயற்சி ஓயும் காலம் வரும், 'அஞ்சாதே, குழந்தாய்! இப்பிறவியிலேயே நீ என்னைக் காண்பது திண்ணம்" என்னும் இறைவனது அருட் குரல் நமது காதில் ஒலிக்கும் சமயம் வரும்.

நாம் கோரும் பயனுக்கு அத்தனை பாடும் வேண்டியதே யாகும். நாம் கொடுக்கும் விலை நமக்குக் கைகூடும் பொருளை நோக்கும் போது அற்பத்திலும் அற்பமே. ஆயினும் நம்மால் இயன்ற அளவுமட்டும் இம்மி விடாது இடையறாது உழைக்கும் அரும்பாடு வேண்டியதில்லை என்பார் ஞான முயற்சியையும் அறியார், அதன் பயனையும் அறியார். முழுக் கவன முற்றிருப்பினும் முயற்சியற்றிருக்கும் நிலை (முயற்சி தானாக நிகழும் நிலை) இதுவே ஞானவாழ்க்கைக்கு வேண்டிய நிலை, இதில் ஆத்திரமும் பட படப்பும் இல்லை; அமைதி குடி கொண்டிருக்கும் நிலை இது. எனினும் அந்த அமைதியைப் பெறுதற்காக, அறிவோடு தீவிரமாகப் பாடுபடுதல் அவசியம்; அதன் பயனாக, அரும்பாடுபடும் உணர்ச்சியைத் தாண்டித் தானாகவே பாடு நிகழும் பக்குவத்தை அடைதல் வேண்டும். சுருங்கச் சொல்லின், தீவிர முயற்சியால் முயற்சியற்ற நிலையை அடைதல் வேண்டும்.

இன்பமாலை

(215-ம் பக்கத் தொடர்ச்சி)

36. அடிக ளாறுந லுலகி னுக்கடி
யாய குமரியை யணுகலாம்
படிக ளாமவை பற்றி யேனிலை
படரு மெய்ச்சிவ யோகியர்
முடிபி லம்பிகை முடிப றும்பத
முளரி கண்டுக ளிப்பரால்
கடிவ ரும்பல பிறவி யாகிய
கடல்க டந்துயி ருய்வரே.

(பொ-ரை) மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி ஆஞ்ஞை என்னும் ஆதாரங்கள் ஆறும், சிறந்த உலகங்களுக்கு எல்லாம் காரணமாகிய நித்த கன்னியாம் தேவியைச் சேர்வதற்கு உரிய படிகளாம்; அவற்றை நியான நெறியாகப் பற்றி ஒவ்வொன்றாய் மேனோக்கிச்செல்லும் மெய்ப்மையையுடைய சிவயோகிகள் அவ்வாறாதார முடிவில் விளங்கும் ஆயிர விதழ்க் கமலத்தில் தேவியின் அழிவற்ற பாத தாமரையைக் கண்டு மகிழ்வர்; (அதனால்) நீங்குவதற்கு அரிய பலபிறவித் தொகையாகிய கடல் கடந்து உயிர் பிழைப்பர்; எ-று.

[அடிகள் ஆறு-ஆறாதாரங்கள். முளரி-தாமரை. கடிவு அரும்—நீக்கற்கு அரிய. உய்வர்—கடைத் தேறுவர்.]

ஆதார யோகத்தின் வழிக் குண்டலி சக்தியைச் சகசிரார பீச நடுவிற் செலுத்தினோர் முத்தி பெறுவர் என்பது. குண்டலினி சக்தி பராசத்தியின் கூறும் என்க.

37. அஞ்சு சிவமுக மமலை தன்முக
மாய டங்கிடு மவண்முகம்
எஞ்சு றுவரு மாறு மாமுக
மிசைய வந்தவன் முருகனால்
தஞ்சு லாவரு தேவி தந்தனள்
தனய னையொரு தன்னையே
மஞ்சு வார்குழ லவளி யற்கையை
வல்லர் யாருளர் சொல்லவே.

(பொ-ரை) சிவபெருமானுடைய சத்தி யோசாதம் தற்புருடம் வாமம் அகோரம் ஈசானம் என்னும் ஐந்து முகங்களும் அமலையாகிய தேவியின் முகமாயடங்கி விடும்; (எனவே) நீக்கம் இல்லாமல் பொருந்திய அவள் முகங்களாகிய சிறந்த ஆறு முகங்களும் (தன்னிடத்துப்) பொருந்தப் பிறந்தவன் முருகனவன்; உயிர்களுக்கு எல்லாம் தஞ்சமாய் விளங்கும் தேவியானவள் ஒப்பற்ற புதல்வனைத் தன்னையே தந்தாள்; மேகத்தைப் போன்ற (கரிய)நீண்ட கூந்தலையுடைய

அவளது இயல்பைச் சொல்ல வல்லவர் யாவர் உளர்? எ-று.

[அமலை—தேவி. எஞ்சு உரு—நீக்க மில்லாத, ஒழிவில்லாத; தஞ்சு—தஞ்சம். உலாவரு—உலவும், விளங்கும், தனயன்—புதல்வன். மஞ்சு—மேகம். வார்—நீண்ட. குழல்—கூந்தல்.]

38. கமல சுந்தரி யுரக கங்கணி
கவுரி யாரணி காரணி
சுமலை சங்கரி யமரி யந்தரி
யசல கன்னிநி ரந்தரி
நிமலை யம்பிகை யருளெ னுங்குளிர்
நிலவை யுண்டுக ளித்திடும்
விமல மாமன மளவு மெய்யுயிர்
மேவி நின்றசகோரமே.

(பொ-ரை) செந்தாமரை போன்ற அழகையுடையவளும் (திருமகள் தானாக இருப்பவளும்) பாம்புகளைத் தோள் வளைகளாக உடையவளும் கவுர நிறத்தையுடையவளும் வேதத்தைத் தோற்றுவித்தவளும் (வேதப் பொருளாயிருப்பவளும்) உலக காரணமானவளும் மாசற்றவளும் இன்பத்தைச் செய்பவளும் அழியாதவளும் (போரைச் செய்பவளும், தெய்வ மாதாயுள்ளவளும்) பரஞானகாயமே வடிவாகவுடையவளும் மலையரசன் மகளும் எங்கும் என்றும் உள்ளவளும் உயிர்களின் மாசை நீக்குபவளும் ('நிமலை' என்னும் பெயரையுடையவளும்) தாயும் ஆகிய தேவியின் அருள் என்னும் குளிர்ந்த நிலவையுண்டு அழுக்கற்ற சிறந்த உள்ளம் பொருந்திய உடம்பில் பொருந்தி நின்ற உயிர்கள் என்னும் சகோரப் பறவைகள் மகிழ்ந்திடும்; எ-று.

சகோரம்-சந்திரனது நிலவை உண்டு களிக்கும் ஒரு பறவை, உயிர்களாகிய சகோரப் பறவைகள் தேவியின் அருளாகிய நிலவை உண்டு களிக்கும் என்க.

[உரகம்—பாம்பு. கங்கணம்—தோள்வளை. அமலை—தேவி. அமரி—அழிவற்றவள். அசல கன்னி—மலை மகள். விமலம்—அழுக்கற்ற. அளவும்—கலந்த. சகோரம்—நிலவையுண்ணும் ஒரு பறவை.

39. அம்மை யூடிட நினைவ ளேனுத
லம்ப கஞ்சிறி தலருமால்
வெம்மை மீறிடி லரனு தற்கணில்
விமலை கட்கடை பாயுமால்
எம்மை யுந்துணை யிவர்க ளல்லதொ
ரேழு பாரினு மில்லையிங்
கிம்மை யேயவ ரிணைம லர்ப்பத
மியைவ தேபய னுய்யவே.

(பொ-ரை) தேவி தன் கணவனாகிய சிவபெருமானுடன் ஊடக் கருதுவளாயின், அவளுடைய நெற்றிக் கண் சிறிது மலரும்; அச் சிவபெருமான் சின மீறி உணர்த்த உணரா ஊடலில் எதிருடுவனாயின், அச்சினத்தால் மலரும் அவனுடைய நெற்றிக் கண்ணில் தேவியின் கடைக்கண் பாயும் (அவ்வருட் பார்வையால் அவனது ஊடல் தணியும்); நமக்கு எப்பிறப்பிலுந் துணையாவார் இவர்கள் அல்லது ஓரேழுலகங்களிலும் இல்லை; இவ்வுலகில் இப்பிறப்பிலேயே நாம் கடைத்தேறும்படி அச்சிவசக்திகளது மலர் போன்ற இரு பாதங்களையும் அடைவதே பயனாகும். எ-று.

[நினைவளேல் நுதல் அம்பகம்—எனப் பிரிக்க; அரன் நுதல் கணில்—எனப் பிரிக்க; ஊடல்-புலத்தல் (கலகித்தல்). நுதல், அம்பகம்—நெற்றிக் கண். கட்கடை—கடைக் கண்.]

40. அலகில் கோடிய ராத வர்க்கிணை
யாக லாதொளிர் சோதியா
யிலகு கன்னிதன் மேனி கண்டிட
விமைய வர்க்கும டுக்குமோ
கலக வாட்கணி கனக சுந்தரி
கவின்வி ளங்கொளி கண்டுதன்
னிலவு கண்களி மைத்த வோவென
நீவு வன்சுர ராசனே.

(பொ-ரை) அளவற்ற கோடிக்கணக்கான சூரியர்களுக்கு ஒப்பாகாமல் (அவர்களினு மிக) விளங்குகின்ற சோதியாய்ப் பிரகாசிக்கின்ற கன்னியாகிய தேவியின் மேனியைத் தேவர்க்கும் பார்க்கலாகுமோ? தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன், கலகமிடுகின்ற (ஒன்றற்கொன்று ஊடுபாய்கின்ற, இகல்கின்ற) வாள் போன்ற (ஒளி பொருந்திய) கண்களையுடையவளும் பொன் போன்ற அழகையுடையவளும் ஆகிய தேவியின் திரண்ட அழகு விளங்கும் ஒளியைப் பார்த்துத் (கூசுவதனால்) இமையாத தன்னுடைய ஆயிரங் கண்களும் இமைத்து விட்டனவோ என்று ஐயமுற்று அவற்றைத் தடவிப் பார்ப்பன்; எ-று.

[அலகு இல் கோடியர் ஆதவர்க்கு—எனப் பிரிக்க. ஆதவர்—சூரியர். இணை-ஒப்பு. இலகு-விளங்கும். இமையவர்—தேவர். நீவுவன்—தடவுவான்.]

41. மாக நிமர்தரு முலகு தேவியின்
மகுட மாகிலை கீழுல
கேக வல்லியி னடியெ னப்படு
மிவர்வி சும்பவ ளாகமாம்

நாக சுந்தரி நாக குண்டலி
நாக நாடிது ரந்தரி
போக நாரிந லமுத வாரிசு
போத வாரிதி பெருமையே

(பொ-ரை) ஆகாயத்தை இவர்ந்து ஓங்கும் மீமிசையுலகம் (ஞான காயத்தின் மிசை விளங்கும் பேரின்ப வீட்டுலகம்) தேவியின் மகுடமாம், கீழுலகு ஏக நாயகியாகிய கொடி போன்ற தேவியின் பாதம் என்று சொல்லப் படும், பரந்த வெளி அவளுடைய உடம்பாம். மலையரசன் மகளாகிய அழகியும், பாம்பாகிய குண்டலத்தை உடையவளும், தேவ நாட்டை உரிமையாக உடையவளும், (எல்லா வண்டங்களிலுந் தனது) ஆட்சியைச் செலுத்துபவளும், எல்லா இன்பங்களையுந் தருபவளும், அமுதமாகிய நீர்ப் பெருக்கைப் போன்றவளும், (இன்ப மழையைச் சொரிபவளும், இன்பத்தின் வருகைக்கு (தோற்றத்துக்கு) இடமாயிருப்பவளும் சிறந்த ஞான சாகரமாயிருப்பவளும் ஆகிய தேவியின் பெருமை இவ்வாறு; எ-று.

[மாகம்—ஆதாயம். மகுடம்—கிரீடம். ஏகம்—ஒப்பற்ற தன்மை. இவர்-பரந்த. விசும்பு-ஆகாயம். ஆகம்—சரீரம். நாகம்—மலை, பாம்பு. நாக நாடு.தேவலோகம், வாரி—நீர்ப்பெருக்கு. வாரிதி-கடல். நல் அமுத வாரி சுபோத வாரிதி—எனப் பிரிக்க, இவர் விசும்பு அவள் ஆகமாம்—எனப் பிரிக்க.]

42. இணைபு ணர்ந்துல கியலு மாறுறு
மியல்பு கொண்டதொர் வல்லமை
அணைய நின்றவ ளழகி மாமலை
யரசி யென்னும வுண்மையே
துணைபெ றச்சிவ னொடுபு ணர்ந்தமை
துரிசி லாதுதெ ரித்திடும்
புணையெ னத்தகு மவள்ப தந்தலை
புனைவ தேபய னவதே.

(பொ-ரை) தேவி சிவபிரானோடு அவனது மனைவியென்னும்படி சேர்ந்து வாழ்வது, அழகியும் சிறந்த மலையரசன் மகளும் ஆகிய அத்தேவி உலகத்துயிர்கள் ஆணும் பெண்ணுமாக இணை சேர்ந்து வாழும்படி பொருந்திய இயல்பினைக் கொண்டதொரு வல்லமை பொருந்தி நிலைபெற்றவள் என்னும் அவ்வுண்மையைக் குற்றமறத் தெரிவிக்கும். (பிறவிக் கடலைக் கடப்பதற்குரிய) தெப்பம் என்று சொல்லப் படும் அவளுடைய பாதத்தைத் தலையில் அணிவதே பிறவிப் பயனாவது; எ-று.

[இணைபுணர்ந்து உலகு இயலுமாறு உறும் இயல்பு—எனப் பிரிக்க. துரிசு—குற்றம். தெரித்திடும்—தெரிவிக்கும். புணை—தெப்பம்.]

43. பொருளு மொன்றுள ததுவ ளித்திடு
புவன முற்றும யக்கமாம்
பொருளெ னும்பரை யருளின் வந்தபு
ணர்ப்பெ னத்திரு மறைசொலும்
பொருள தேயுல காய்வி ளங்குமொர்
புதுமை பழமையி னுணர்வரால்
பொருளெ னப்பல பொருளெ லாந்திகழ்
புவனி தாள்பணி புனிதரே.

(பொ-ரை) பலவாகிய பொருள்கள் எல்லாவற்றிலும் தானே பரம்பொருளாய் விளங்கும் உலக நாயகியின் பாதங்களை வணங்கும் தூய்மையாளராகிய ஞானிகள், 'உண்மைப் பொருளும் ஒன்றேயுள்ளது (உள்ளதாகிய பொருளும் ஒன்றே) அப்பொருள் அளித்த உலக முழுதும் மாயையால் வந்ததாம், பரம் பொருளின் வெளிப்பாடாக இருந்தும் அதை விட்டு வேறாகத் தோற்றுவிக்கு மயக்கத்துக்கு இடமானதாம், ஐம்பூதக் கலப்பால் (பஞ்சீகரணத்தால் உண்டானதாம்), அவ்வுலகம் பரம்பொருள் எனப்படும் பராசக்தியின் அருளால் வந்த ஆக்கப் பொருளாம் என்று கருதிச் சிறந்த வேதங்கள் சொல்லும் பரம் பொருளே (பரா சக்தியே) உலகாய் விளங்கி நிற்கும் புதுமையைப் பழமைப்பட்ட வழக்காறாக உணர்வர்', எ-று.

[பொருளும் ஒன்று உளது, அது, அளித்திடு—எனப்பிரிக்க. புவனம்—உலகம். புனிதர்—தூயவர்.]

ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்தரின் பெருமை

இவ்வாண்டு சுவாமிகளின் பிறந்தநாள் விழாப் பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ M. சுப்பராய ஐயர், B.A.B.L., ஆற்றிய சொற்பொழிவு

இந்த சந்தர்ப்பத்தில் சசி மகராஜைப் பற்றிப் பேச வேண்டும் என்று எனக்கு இம் மடத்துத் தலைவர் கட்டளையிட்டிருக்கிறார்; சசிமஹராஜ் அவர்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன் என்பதும், மடத்தில் சேர்ந்து நானும் ஒரு சன்னியாசியாக ஆகாவிட்டாலும், சுமார் நாற்பத்திரண்டு வருஷங்களுக்கு மேலாக மடத்துடன் எனக்குத் தொடர்பு இருந்து வருகிறது என்பதுதான் இதற்குக் காரணம் ஆகும். 1909-ம் வருஷம் நான் மயிலாப்பூருக்கு வந்தேன். அதற்கு முன்னால் தங்கசாலை வீதியில் இருந்து வந்தேன்.

சுவாமிகள் பிரசங்கம் செய்வதற்காக அங்கு வரும்போது அவரைப் பார்த்திருக்கிறேன். மேலும் சிந்தாத்திரிபேட்டையிலும், காசிச் செட்டித் தெருவிலும் அவர் முறையாக நடத்தி வந்த வகுப்புகளுக்கும் நான் சென்றிருக்கிறேன். வகுப்புகளுக்கு வந்திருப்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு குறைவாக இருந்த போதிலும் சுவாமிகள் குறித்த காலத்தில் வகுப்பை ஆரம்பித்துவிடுவார். நான் ஏற்கெனவே சுவாமி விவேகாநந்தரை அறிந்திருந்தது, சுவாமி ராமகிருஷ்ணாநந்தரிடம் பக்தியை அதிகப்படுத்தியது.

1897-ல் நான் இரண்டாவது பாரம் வகித்துக் கொண்டிருக்கும் போது சுவாமி விவேகானந்தரைக் காண சந்தர்ப்பம் கிடைத்தது. அகஸ்மாத்தாக ஒரு நாள் எஸ்பிளனேட் மைதானத்தில் போய்க் கொண்டிருந்த போது, தற்போது பர்மாஷெல் கம்பெனி இருக்கும் இடத்தில் ஒரு ஸர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது. அந்த இடத்தில், அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்திருந்த சுவாமி விவேகானந்தருக்கு வரவேற்புக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஸ்ரீ. சுப்பிரமணியர் (ஜட்ஜ்) ஸ்ரீ வி. பாஷ்யம் ஐயங்கார் இருவர்களுடன் சுவாமி விவேகாநந்தர் இரட்டைக் குதிரைவண்டியில் வந்து இறங்கினார். ஸ்ரீமான்கள் வி. கிருஷ்ணசாமி ஐயர், பி. ஆர். சுந்தரமய்யர், டாக்டர் நஞ்சுண்டராவ் ஆகிய எல்லோரும் அங்கே இருந்தார்கள். வரவேற்புப் பிரசங்கங்களையும், அதற்கு சுவாமிஜி கொடுத்த பதிலையும் நான் கேட்டேன். அவை என் மனதில் பதிந்துவிட்டன. பிற்பாடு சுவாமிஜி காலமானதைக் கேட்டபோது நிரம்பவும் துக்கப்பட்டுக் கண்ணீர் விட்டேன்.

1909-ல் நான் மயிலாப்பூருக்கு வந்தபோது 'ராமு', 'ராமானுஜ—' ஆகிய இருவரோடும் நான் நெருங்கிப் பழக சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்கள் இருவரும் ராமகிருஷ்ணாநந்தருடைய இரு செல்வப் புதல்வர்கள்; அவருடைய உபதேசத்தினால் இருவரும் சேவையே உருக் கொண்டவர்களாக ஆய்விட்டார்கள். நான் ராமுவுடன் அடிக்கடி மடத்துக்குப் போவதுண்டு. அங்கு சுவாமி ராமகிருஷ்ணாநந்தரைப் பார்த்து நமஸ்கரித்துவிட்டு வருவதுண்டு. அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே காய்கறி நறுக்குவது போன்ற சாதாரண வேலைகள் செய்து கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர் வேகமாகப் பேசமாட்டார். ஆனால் எப்படியோ கேட்பவர்களின் கவனத்தைக் கவர்ந்து விடுவார். அவருடைய வைதீகப் பழக்கங்கள், தென்னிந்தியர்களின் வைதீகப் பழக்கங்களுக்கு ஒத்திருந்தன. ஆகையினால்தான் இங்கே வேலை செய்வதற்காக அவரை சுவாமி விவேகாநந்தர் பொறுக்கியெடுத்தார். அதுவுமன்றி, மடம் மிஷன் போன்ற ஸ்தாபனங்களை ஆரம்பித்து, நடத்தி நிர்வகிக்க வேண்டுமென்றால் ராமகிருஷ்ணாநந்தரின் மகத்தான சேவை அவசியம் என்று சுவாமி விவேகாநந்தர் அறிந்திருந்தார். அவருடைய தபசும் பக்தியும், பலபேருக்கு அவரிடத்தில் ஒரு விதக் கவர்ச்சியை உண்டாக்கின. சேவைக்காகவே தங்களைத் தத்தம் செய்துவிட்ட சன்யாசிகளுடைய ஸ்தாபனம் ஒன்று உண்டாக்க வேண்டும் என்பது விவேகானந்தரின் விருப்பம். இந்த ஸ்தாபனத்தின் மூலம், எல்லா மதங்களையும் ஒற்றுமைப் படுத்திக் காட்டியதோடு ஒவ்வொருவனையும், அவனவனுடைய மதத்திலேயே நம்பிக்கை கொண்டிருக்கச் செய்யவேண்டும் என்ற ஸ்ரீபகவான் ராமகிருஷ்ணருடைய போதனைகள் விஸ்தரிக்கப்படல் வேண்டியிருந்தது. இதற்கு முன்னால் இத்தகைய ஒரு இயக்கமோ அல்லது ஸ்தாபனமோ இருந்திருக்கவில்லை. மகான்கள் அவ்வப்போது தோன்றி, தங்களுடைய பெருமையை உலகம் அறியும்படிச் செய்தார்கள். ஆனால் அவர்களுடைய மறைவுக்குப் பின்னால் அவர்களுடைய போதனைகளும், வேலைகளும் மறைந்து கொண்டே வந்தன. இதை நம் நாட்டினுடைய சாபக்கேடு என்றே சொல்லலாம். ஆகவே, சிவாஜி காந்திஜி போன்ற பெரியவர்களின் போதனைகள் போல் மறக்கப்படாமல், ஸ்ரீ ராமகிருஷ்ணரது மகிமை உலகத்தில் உறுதியாக இருக்கவேண்டும் என்று விவேகாநந்தர் விரும்பினார். இதற்குத் தகுந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த, ஒரு தலைசிறந்த சிற்பி வேண்டும். அப்படிப்பட்ட சிற்பியாக ஸ்ரீராமகிருஷ்ணாநந்தர் ஆனார்.

ராமகிருஷ்ணா மிஷனைப்பற்றி நடந்த ஒரு வழக்கில் 12 வருஷங்கட்கு முன்பு அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யரின் ஆலோசனையின் கீழ் நான் ராமகிருஷ்ணா மிஷன் சார்பில் சம்பந்தப்பட்டு வந்தேன். அப்போது, தென்னிந்தியாவில் ஒவ்வொரு மடமும் எப்போது ஸ்தாபிக்கப்பட்டது, அதை ஸ்தாபிக்க யார் யார் என்னென்ன பாடுபட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நான் விவரமாகத் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் மூலம், பங்களூர் மடத்தையும், தென்னிந்தியாவிலுள்ள இதர மடங்களையும்

ஸ்தாபிக்க, ஸ்ரீராமகிருஷ்ணாநந்தர் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார் என்று அறிந்தேன். இவ்விஷயத்தில் அவர் என்னென்ன கஷ்டங்களை எடுத்துக் கொண்டார், பங்களூர் மைசூர் முதலிய இடங்கட்கு எத்தனை தடவைகள் அலைந்திருக்கிறார் என்பது தெரிய வந்தது. ஸ்ரீராமகிருஷ்ணானந்தர் ஒருவரின் பெரும் முயற்சியினாலேயே இப்போது 'மிஷனின்' ஒவ்வொரு ஸ்தாபனமும் நடந்து வருகிறது என்பதை அறிந்தேன்

(தொடரும்)

"வானப்பிரஸ்தர்"

டி. ஆர். ராமநாத சாஸ்திரி. B. O. L.

[கல்யாணிலிருந்து மொழிபெயர்த்தது.]

(223-ம் பக்கத் தொடர்ச்சி)

(3)

'நீர் காய்ச்சல் நோயினால் வருந்துகின்றீர். ஓர் முறை கூட நீர் குளிக்கக்கூடாது. இந்த நிலைமையில் மூன்றுமுறை குளிக்கலாமா?' என்று வைத்தியர் வினவினார்.

பாவம்! 'முனிவருக்குக் காய்ச்சல் கண்டிருக்கிறது' என்று விறகுவிற்று வாழ்க்கை நடத்தும் காட்டாள்கள் சொல்லியதைக் கேட்டுப் பக்கத்தூர் வைத்தியர் அன்பினால் தூண்டப்பட்டு அங்குவந்தார்.

'என் யாக புருஷர், அக்கினிதேவர் என் பணியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் நான் எவ்விதம் குளிக்காது இருக்க முடியும்?' என்றார் முனிவர்.

வைத்தியர்: உடலை நீரினால் துடைத்து உள்ளத்தில் குளித்ததாக எண்ணுதலும் ஓர் முறையென்பது தமக்குத் தெரியும், என்று எண்ணுகிறேன். அப்படியும் ஹோமம் செய்யலாமே!

முனிவர்: எல்லா முறைகளையும் பின்பற்ற முடியும். ஆனால் என் தேவர் விஷயத்தில் இம்மாதிரி ஏமாற்ற முறைகளைச் செய்ய என் உள்ளம் இசையாது.

வைத்தியர்: எத்தனை நாட்கள்தான் உடல் இக்கட்டுப்பாடுகளைப் பொறுத்துக் கொள்ள முடியும்? அதைக் கவனிக்க வேண்டாமா?

முனி: உடல் என்றால் என்றாவது அழிந்தே யாக வேண்டும். உடலை எல்லா விதமான முறைகளுடனும் காத்துவருபவரும், முற்பிறவிகளின் வினைப்படிப் பற்பல துன்பங்களை அனுபவித்தே யாக வேண்டும். குளித்தல் காற்றோட்டம், மருந்து சாப்பிடுதல் முதலியவையெல்லாம் பெயரளவிற்குத் தான்.

வைத்தியர்: உடலையும் ஓரளவு கவனிக்கத் தான் வேண்டும்.

முனிவர்: 'எம்பெருமானுக்குப் பணியாற்றுதலை விட உடலைப் பேணுதலே உயர்ந்தது' என்று சொல்லப் பார்க்கின்றீரா?

வைத்தியர்: நீங்கள் குளிக்காமல் இருந்து கொண்டு மருந்துகளை உட்கொள்ளத் தொடங்க வேண்டும். வேறுவழியில்லை.

முனிவர்: மருந்துகளை உட்கொண்டால் நோய் நீங்கிவிடும் என நீர் உறுதி கூற முடியுமா?

வைத்தியர்: நான் அவ்விதம் உறுதியான நம்பிக்கையை வைத்திருக்கிறேன். அவ்வளவுதான் கூறமுடியும்.

முனிவர்: நம்பிக்கையை வேறுவிதமாகக் கொள்ளவேண்டும். முற்பிறவியின் வினைப் பயன்கள் அனுபவிக்க வேண்டியவரையில் நோய் இருந்தே தீரும். அவற்றை அனுபவித்து முடிந்தவுடன், நோய், தானாக மருந்தெதுவும் இன்றியே மறைந்துவிடும். காட்டுத் தீ, கட்டைகளை எரித்து முடிந்தவுடன் தானாக அணைவதை நாம் பார்க்கிறோமல்லவா? இதுதான் நீர்பெற வேண்டிய நம்பிக்கை.

என்று, கடுங் காய்ச்சலின் உணர்ச்சியெதுவும் முகத்தில் தென்படாமல் முனிவர் பேசினார். அவர் முகம் புன் முறுவலினால் திகழ்ந்தது.

வைத்தியர்: நீர் இன்னும் எதற்காக அக்கினியைப் பூஜை செய்ய வேண்டும்? நீர் வானப் பிரஸ்தாசிரமத்தின் முறைகளையெல்

லாம் பின்பற்றி வெற்றியையும் பெற்றுப் பல ஆண்டுகள் ஆயின. கடவுளைப் பற்றிய உண்மை யறிவும் முழுதும் ஏற்பட்டிருக்கிறது. இனி நீர் இந்த நியமங்களைப் பின்பற்றவும் வேண்டாம். அக்கினி பூஜையைச் செய்யவும் வேண்டாம். துறவறத்தை ஏற்றுக் கொள்க. நானே ஆசிரியனாக இருந்து முறைப்படி நடத்திக் கொடுக்கிறேன்.

முனிவர்: யாகத்தின் தெய்வமான அக்கினி வடிவத்தில் விளங்கும் எம்பெருமான் நாராயணனைச் சேவிப்பதை விட்டு மனம் வேறெதிலும் பற்றுக்கொள்ளாது. அதில் பற்றுள்ளவரையில் துறவு எங்ஙனம் ஏற்படக் கூடும்? உண்மையை ஆராய்ந்து பார்க்கின், உள்ளம் அந்த நாராயணனிடம் ஈடுபட்டிருக்கையில் வெளியுலகின் உணர்ச்சியைத் துறப்பதுதான் துறவாகும். அத்துறவு தானாக ஏற்பட வேண்டுமேயன்றிப் பிறர் கொடுத்துப் பெறமுடியாது. வேண்டிய போது நம்விருப்பப்படி ஏற்படவும் ஏற்படாது.

வைத்தியர்: மன்னிக்கவும். சாஸ்திர அறிவு ஓரளவு எனக்கும் உண்டு. தங்கள் கூற்று விளங்கவில்லை. உண்மைப் பற்றொழித்தல் ஏற்பட்டபின், ஐந்து யாகாக்கினிகளையும் ஐந்துவிதமான பிராண வாயுக்களில் ஏற்றிப் பற்பல செயல்களைத் துறந்து விடுதல் தான் உண்மைத்துறவு என்று சாஸ்திரங்கள் உணர்கின்றன. அதற்கென்ன சொல்கின்றீர்?

முனிவர்: சாஸ்திரங்களிற் கூறிய ஏற்பாடு ஒழுங்கானதே! இஃதெல்லாம் அவரவர்களுடைய விருப்பத்தையும் உள்ளத்தின் பக்குவத் தன்மையையும் பொறுத்து ஏற்பட்டன. பிரம்மானந்த ரஸத்தை அனுபவிப்பதற்குத் தனிமை வேண்டும் என்பது உண்மை. ஆனால் பிரம்மானந்ததை யளிக்கும் ஸ்ரீ நாராயணனின் பணியில் ஈடுபட்டு அந்த இன்பத்தைப் பெற விரும்புகிறவன் எவ்வாறு செயல்களைத் துறக்க முடியும்? அவன் செயல்களைச் செய்து கொண்டே துறவியாக இருக்கமுடியும்.

வைத்தியர்: எப்படி முடியும்? நம்ப முடியவில்லையே!

முனிவர்: (உணர்ச்சிப் பெருக்கையடக்க முடியாது, நீரை விழிகளினின்றும் பெருக்கிய வண்ணம்.)

முடியும்! முடியும்!! எம்பெருமானுடைய திருவடிகளில் ஆழ்ந்த அன்பு ஏற்பட வேண்டும். அவ்வன்பினாலான அமிருத நீர்ப்பெருக்கில் உள்ளம், உயிர், உடல் மூன்றையும் பற்றிய உணர்ச்சி மூழ்கிப் போகவேண்டும். அங்கு மூழ்கியவனுக்குச் செயல் செயலாற்றுபவன், என்ற உணர்ச்சிகளே எழுவதில்லை. அவ்விதமான அன்பு அந்தக் கருணைக்கடலான பிரபுவினுடைய அருளினால் மட்டும் ஏற்படக்கூடியது. நம்முடைய அற்பமான முயற்சியினால் பெறக்கூடாதது. அவருடைய அருளை எதிர்பார்ப்பதுதான் நம் வசத்தில் உள்ளது.

என்று பேசிய வண்ணம் முனிவர் தம்மையும் வெளியையும் மறந்து இருந்துவிட்டார். முனிவர் அன்றுதான் தினக் கடமைகளைச் செய்யக்கூட மறந்து போனார்.

வைத்தியர் முனிவருக்கு மருந்து கொடுப்பதில் நம்பிக்கையை இழந்து திரும்பிச் சென்றார்.

(4)

காய்ச்சல் விட்ட பாடில்லை. உடல் இளைத்துப் போயிற்று. ஆனால் அதைப்பற்றி முனிவர்களை கொள்ளவில்லை. குளித்தல் முதலிய தினக் கடமைகளிலோ, அக்கினி பூஜையிலோ இடையூறு ஏற்படுவதை முனிவர் பொறுக்க முடியாது. ஆதலால்தான் உண்ணாமல் இருந்து நோயை நீக்கி, உடலைச் சீர்படுத்தும் முறையைத் தொடங்கினார். சில நாட்கள் சென்றன. 'அன்று அக்கினி தேவர் உபவாசம் இருக்க நேரிட்டது'. முனிவர் என்ன செய்வார்? பாவம்! உடல் இளைத்தது. முதுமை ஓர்புறம் துன்புறுத்தியது. 25 நாட்களாக உபவாசம். அதிலும் கடந்த ஐந்து நாட்களாக நீரைக்கூடப் பருகவில்லை. அருவியில் நீராடச் சென்றார். திரும்பி வருகையில் முனிவருடைய கால்களில் மரத்தின் வேர்பட்டுவிட்டது. முனிவர் கீழே விழுந்து உணர்வையிழந்து கிடந்தார். தலையில் அடிபட்டு விட்டது. எவ்வளவு நேரமாக உணர் விழந்து கிடந்தார் என்று அவருக்குத் தெரியாது. கண்திறந்து பார்க்கையில் மாலை நேரம் என அறிந்தார். காலையில் நீராட வந்தவரானதால், முனிவர் அன்று முழுதும் உணர்விழந்து கிடந்ததாக எண்ணினார். அன்று ஹோமம் செய்யாமல் இருக்க நேரிட்டதே என்று துடித்தார். பாவம்!! கடந்த நான்குநாட்களாகத்தான் உணர் விழந்திருப்பதாகவும், அக்கினி தேவருக்குப் பூஜை நான்கு தினங்களாக நடைபெற வில்லை யென்பதும் அவருக்கு எவ்விதம் விளங்கும்?

மெல்லிய உடலைப் பெற்ற முயலொன்று முனிவருடைய உடலின்மேல் படுத்துக்

கொண்டு தன் உடலின் சூட்டை அவருக்கு அளித்துச் சீதங்காணாமற் காத்தது. மான்கள் அவரைச் சூழ்ந்து நோக்கிய வண்ணம் இருந்தன. குரங்குகள் எங்கெங்கிருந்தோ நல்ல கனிகளைக் கொணர்ந்து முனிவரின் அருகில் குவித்து வைத்தன. ஓர் மயில் தன் தோகையை விரித்து முனிவர் தலையில் நிழல் படுமாறு செய்தது. கீரி ஒன்று தன் நாவினால் காயமுள்ள இடத்தை நக்கிக் கொண்டிருந்தது. கடவுளைத் தன் உள்ளத்தில் கொண்ட பெரியோருக்கு எல்லாப் பிராணிகளும் உதவி புரிந்தமையில் விந்தை என்ன? முனிவருடைய உள்ளம் அதையெல்லாம் கவனிக்கவில்லை. மாலை நேரப்பூஜையில் தடங்கல் ஏற்பட்டு விட்டதே என்ற ஒரே கவலையினால் அவர் வாடினார். அவர் எழுந்தார். ஆனால் முடியவில்லை. கால்கள் தள்ளாடின. எப்படியோ தன் ஆசிரமத்திற்குச் சென்று விட்டார். அரசனைத் தொடர்ந்து பணியாளர் செல்வதையொட்டி எல்லா விலங்குகளும் அவரைத் தொடர்ந்து சென்றன.

‘மலர்களெல்லாம் ஏன் இவ்வளவு வாடி விட்டன? இலைகளும் ஏன் வாடிப் போயின? நான் நேற்றிலிருந்து உணர்விழந்து படுத்துக் கிடந்தேனா, என்ன?’ என்று பதட்டத்துடன் ஹோம குண்டத்திற்கருகில் ஓடினார்.

அக்கினி தேவர் ஹோம குண்டத்தை விட்டுச் சென்றுவிட்டார். முனிவர் உள்ளங் கலங்கினார். உடல் நடுங்கியது. சாம்பலைக் கிளறிக் கிளறிப் பார்த்தார். தீ இருப்பதன் அறிகுறி எதையும் காணவில்லை.

உபநயனம் (பூணூல் போட்டுக்கொண்டு ஆசிரியரிடம் உயர்ந்த கல்வியைப் பெறுதல்) செய்து கொண்ட நாளில் ஆசிரியரின் அருளுடன் பெற்ற அக்கினியை இடைவிடாது தொடர்ச்சியாகப் பல்லாண்டுகளாகப் பாதுகாத்துவந்தார். ஒன்று துறவியாகி அந்த ஹோமத்தை நிறுத்தவேண்டும். அல்லது உடலை அத்தீயில் ஹோமம் செய்து பூஜையை முடிக்கவேண்டும். ‘இவ் இரண்டுமல்லாத முறையில் தீயணைந்துவிட்டதே?’ என்று நினைத்த முனிவர் மூர்ச்சை நிலைக்கு வந்து விட்டார்.

‘கருணை வள்ளலே! நீர் என்னைக் காப்பாற்றினீர்’ என்று கூறிய வண்ணம் முனிவர் எழுந்தார். வறுமையால் வாடுபவனுக்குக் குபேரனுடைய புதையல் கிடைத்தால் எவ்வாறு மகிழ்ச்சி ஏற்படுமோ, அவ்வளவு மகிழ்ச்சி அவருக்கு ஏற்பட்டது. சாம்பலைக் கிளறுகையில் ஓர் சிறிய தணல் தென்பட்டது. முயற்சி செய்து அதை எரியுமளவிற்குக் கொண்டுவந்தார். ஹோமத்தையும் செய்து முடித்தார். சோர்வினால் மந்திரங்களை மட்டும் நன்றாகச் சொல்ல முடியவில்லை.

‘என்னுடைய தினக் கடமையை இடைவிடாது செய்து வந்ததினின்று வழுவிப் போனேனே! அக்கினிதேவர் எவ்வளவு நாட்களாக உபவாஸம் இருக்க நேரிட்டதோ! அறியேன். இந்தக் குற்றத்தைப் போக்குவதற்காக மறுபடியும் உபவாஸம் இருக்கலாம்.

ஆனால் அடிக்கடி உணர்வை யிழப்பேன். மறுபடியும் ஹோமம் தடைபட்டுப் போகலாம். குற்றம் மேலும் அதிகமாகலாம். என்ன செய்வேன்? சரி சரி நான் 12 ஆண்டுகள் தொடர்ந்து வானப் பிரஸ்த முறைப்படி அக்கினி பூஜை செய்வதாக உறுதிகொண்டேன், அந்த எல்லை இன்று முடிவுபெற்றது. அக்கினிதேவர் சிறிய உருவத்தில் அணைந்து போகாமல் இருந்தது மிகவும் விந்தையே. அவர் என் துணை எதிர்பார்க்கின்றார் எனத் தோன்றுகிறது. அங்ஙனமே செய்கிறேன்’ என்று முனிவர் உறுதி கொண்டு எழுந்தார். ஆசிரமத்திலிருந்து குச்சிகளை யெல்லாம் ஹோமகுண்டத்தில் இட்டுத் தீயை வளர்த்தார். தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கிற்று. கட்டைகளையும் போட்டார். எழுந்து ஆசமனம் செய்தார். மூன்று முறை வலம் வந்தார். தரையில் விழுந்து வணங்கினார்.

‘என்னுடைய உடலையே நான் ஹோமம் செய்கிறேன். அக்கினிதேவர் மகிழட்டும்,’ என்று சொல்லிக்கொண்டே தலையைத் தூக்கியவாறு எழுந்தார். தீயில் பாய்ந்தார்.

‘இஃதென்ன !!’ என்று முனிவர் கூவினார். தீச் சுடரின் நடுவிலிருந்து பொன்மேனி, நான்குகைகள், மின்னல் போன்ற ஆடை, மணிகள் பதித்த கிரீடம், சங்குசக்கிரம் முதலிய ஆயுதங்கள் பெற்ற யாகத் தலைவர், நாராயணர், இருகைகளையும் நீட்டிய வண்ணம் முனிவரைத் தழுவி மடியில் அமரச் செய்தார்.

‘பிரபோ’ இதுவும் உன் அருள்’ என்றார் முனிவர்.

செய்தி

ஸ்ரீமத் சுவாமி தியாகீசாநந்தர் காலமானார்

பேலூர் மடத்தைச் சார்ந்த, பங்களூர் ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமத்தின் தலைவராயிருந்த ஸ்ரீமத் சவாமி தியாகீசாநந்தர் இவ்வாண்டு ஆகஸ்டு மாசம் 6-ம் தேதி (6-8-1951) திங்கட்கிழமை யன்று காலை தமது உடல் வாழ்க்கையை நீத்தார். சுவாமிகட்கு வயது அறுபது.

மடத்தைச் சேருமுன் சுவாமிகளின் பெயர் கிருஷ்ணமேனன் என்பது. கொச்சியைச் சார்ந்த திருச்சூரில் கல்விப் பயிற்சியும் புகழும் பெற்று விளங்கிய ஒரு குடும்பத்திற் பிறந்தவர். சென்னையில் கல்லூரியில் கற்று வரும்போது அவர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் சங்கம் இரண்டிற்கும் தலைவராய்த் திகழ்ந்த ஸ்ரீமத் சுவாமி பிரம்மானந்தஜி மஹராஜ் அவர்களின் அருளுக்கு இலக்காகி, அவரிடமிருந்து தீக்ஷை பெற்றார். வடமொழியில் பீ. ஏ. ஹானர்ஸ் என்னும் பட்டம் பெற்றபின் (தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்றார்) அவர் பீ. எல். (சட்டப் பரீக்ஷை) தேறி, ஒரு வழக்கறிஞராக அமர்ந்தார். அத்தொழிலை நடத்து முறையிலே தாம் போற்றிவந்த சத்திய விரதத்தைத் தாமறிந்த வண்ணமே பின்பற்றுவதில் உள்ள அருமையை உணர்ந்து, அத்தொழிலைக் கைவிட்டு, தவமும் தன்னடக்கமும் பழகத் தலைப்பட்டார். இதற்கிடையே திருச்சூரில் புதிதாகத் தொடங்கப்பட்டிருந்த 'விவேகோதய உயர்தரப் பள்ளி'யின் ஆட்சிக் கழகத்தார் அவரது தொண்டை அக்கலாசாலைக்கு விரும்பி அவரை அணுகவே, அவரும் கார்கண்ட தோகையெனக் களித்து அதன் தலைமையாசிரியராக அமர்ந்தார். அப்பதவிக்கு இன்றியமையாத எல்.டி. (போதனா முறையின் தேர்ச்சிக்குரிய பட்டம்) பட்டமும் பின்னர்ப் பெற்று, மாணவரைப் பயிற்றும் தொழிலைக் கைக்கொண்டார். அந்நாளில் அவர் பள்ளியில் ஒரு கோயிலை அமைத்தும், முறையாகப் பிரார்த்தனை செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தியும், பள்ளியாசிரியர்க்கெனக் 'கீதை வகுப்பு' ஒன்றை நடத்தியும், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளைத் தமது ஊர்க்கு வரவழைத்துப் பிரசங்கங்கட்கு ஏற்பாடு செய்தும், சங்கீதம் நாடகம் விளையாட்டு முதலியவற்றிற் பையன்கட்குப் பயிற்சியளித்தும் பலவாறு மாணவர்க்கும் பிறர்க்கும் நல்வழி காட்டிவந்தார். இதன் பயனாக, இளைஞரும் முதியாரும் ஆகிய பலர் அவரது தலைமையைப் பின்பற்றித் தொண்டு செய்ய முன்வரலானார். இவர்களது துணையைக் கொண்டு அவர் பெரும்பாலும் தீண்டாதாருடைய குழந்தைகட்காகத் திருச்சூர்க்கு ஐந்துமைல் தூரத்திலுள்ள விளங்கன்ஸ் என்னுமிடத்தில் ஒரு குருகுலத்தையும் உயர்தரப் பள்ளியையும் ஸ்தாபித்தார். (அவரை அன்று நாடிய தொண்டரிற் பன்னிருவர் இன்றும் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த துறவியராகித் தொண்டாற்றிவருகின்றனர்.) இப்பணியை நிலையாக அமைத்த பின்னர் அவர் ஸ்ரீமத் சுவாமி சிவாநந்தஜி மஹராஜ் என்னும் பெரியாரிடம் (திருமடத்துத் தலைவரிடம்) துறவு பெற்றார், தியாகத்தில் அவர்க்கு இருந்த பற்றைக் கருதித் 'தியாகீசாநந்தர்' எனும் நாமம் அளித்தார் அக்குரவர்.

1936-ம் ஆண்டில் சுவாமிகளிடம் க்ஷய ரோகக் குறிகள் தோன்றிய போது, உடனே திருச்சூரினின்றும் அவர் அப்புறப்படுத்தப்பட்டு விரைவில் குணமடைந்தார். சிறிது காலம் அவர் மைசூர் ஆசிரமத்தில் துறவிகளின் கல்விப் பயிற்சிக்காக அமைக்கப்பட்ட ஓர் ஏற்பாட்டின் மூலம் அறிவு பெருகப் பெற்றுப் பின் பங்களூர் ஆசிரமத்தின் தலைவராக அமர்ந்தார். சுவாமிகளின் இயற்கைப் புலமையாலும், மாணவரிடத்தும் கற்றறிந்த இளைஞரிடத்தும் அவர் செலுத்திய கவனத்தினாலும் பல்லோர் அவரை நேசித்தும் போற்றியும் வரலாயினர். பங்களூரிலும் அவரது கவர்ச்சிக்கு வசப்பட்ட இளைஞர் பலர் குருமஹராஜரது ஞானப் பணிக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய முன் வந்தனர்.

சரியான உயரமும் தசை வளர்ச்சியும் வாய்ந்த திண்ணிய உடற்கட்டைப் பெற்றிருந்தும் சுவாமிகளது தவத்தின் கடுமையால் உடல் நலம் ஒருவாறு சிதையவே, இரண்டாண்டுகட்கு முன்பு பங்களூரில் ஓர் ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறும் சந்தர்ப்பம் ஒன்று நேர்ந்தது. அதன்பின் ஓராளவிற்கு நோயற்றவராய் வாழ்ந்து வந்தார். சென்ற மார்ச்சு மாதம் பங்களூரில் உள்ள ஓர் அன்பரோடு தென்னிந்தியா யாத்திரையை முடித்தனர். இருப்பிடம் மீண்டதும், சில நண்பர்களின் வேண்டுகோட்கு

இணங்கி, சாந்தோக்கிய உபநிடதத்தின் மொழிபெயர்ப்பை ஒரு சிலரைத் துணையாகக் கொண்டு எழுதுவிக்கத் தொடங்கினர்; ஆயினும் யாதேனும் ஓர் இடுக்கண் நிகழ்ந்து, தமது பணியை முற்றுவிக்க இடங்கொடாது போகலாம் என்ற உணர்ச்சியும் அவர் பால் இடையிடையே எழுந்தது. சில நாள்கட்குள் கூரிய முதுகுவலி தோன்றலும், அதன் காரணம் முதுகென்பைப் பற்றிய க்ஷயநோய் என்பது ஆராய்ந்து காணப்பட்டது; உடனே தக்க சிகிச்சைக்காக ஆன்பத்திரிக்கு அவர் அனுப்பப்பட்டார். தலைமை மடத்திலிருந்து அவர்க்காக வந்த ஸ்ரீமத் சுவாமி ஆத்மப்பிரகாசாநந்த மஹராஜரும், பங்களூர் ஆசிரமத்துப் பிரம்மசாரிகளும், 'எஞ்சினீயரிங்' இலாகாவைச் சார்ந்த இரு உத்தியோகஸ்தர்களும் முறைப்படி சிகிச்சை இயற்றி வரலானர். எனினும் நிலைமை வரவரக் கெடவே, இறுதி ஆகஸ்டு மாசம் 9-ம் தேதி குறுகலாயிற்று. சுவாமிகளின் ஆன்மா சாந்தியடைவதாக!

மயிலைத் திருமடத்தின் ஸ்தாபகரது பிறந்த நாள் விழா

மயிலைத் திருமடத்தின் ஸ்தாபகரான ஸ்ரீமத் சுவாமி ராமகிருஷ்ணாநந்தஜியின் பிறந்த நாள் விழா ஜூலை 31-ம் தேதியன்று காலையில் பூஜை பாராயணம் பிரசாத விநியோகம் முதலிய வைபவங்களோடு விமரிசையாக நடைபெற்றது. பொதுக் கூட்டம் அடுத்த ஆகஸ்டு 5-ம் தேதி மாலை 5-45 மணிக்குத் தொடங்கிற்று. பிரபல வக்கீல் ஸ்ரீ M. சுப்பராய ஐயர் தமிழிற் செய்த நேர்த்தியான பிரசங்கத்தில், சுவாமி ராமகிருஷ்ணாநந்தரைத் தாம் சந்திக்க நேர்ந்த விதத்தையும், சுவாமி விவேகாநந்தரது ஆணைக்கிணங்கி அவர் சென்னைக்கு வந்து தொண்டு செய்த வரலாற்றையும், சுவாமிகளின் குரு பக்தி குருசேவைகளையும், தமது சகோதர சீடர் மீது சுவாமிகட்கிருந்த பேரன்பையும், அவரது பூஜா அனுஷ்டான முறையையும், மதப் பிரசாரஞ் செய்த மேன்மையையும் பற்றி விவரமாகப் பேசினர். (அப்பேச்சு 'விஜயத்'தில் வெளியிடப்பட்டுள்ளது.) அதன் பின்னர் விவேகாநந்த கல்லூரியில் வடமொழி ஆசிரியரான ஸ்ரீ ப. வெங்கடாசலம் என்பவர் ஆங்கிலத்தில் ஓர் இனிய சொற்பொழிவாற்றினர். பிரசங்க ஆரம்பத்தில், வாசஸ்பதி மிஸ்ரர் தமது பிரம்ம சூத்திர பாஷியத்திற் கூறிய அவையடக்கத்தை நினைவூட்டித் தமது உரை ஸ்ரீ சசிமஹராஜ் என்னும் கங்காப் பிரவாஹத்தைச் சேர்தலின் புனிதம் அடையும் என்றும், தமக்கு அப்பணியை இட்டது அசோகவனிகா நியாயமே என்றும் அவர் தொடங்கினர். பின் ஆறு வாக்கியங்களில் சுவாமிகளின் பிறப்பு, கல்வி, பாரநகோர் மடத்து வாழ்க்கை, சென்னை விஜயம், பிரசாரப்பணி, குருபக்தி இவற்றைக் கூறும் வகையாலே வாழ்க்கை வரலாற்றைச் சுருங்கக் கூறினர். பின் அவரது நல்லியல்பிலே பூத்த நறுமலர்களாகிய சில குணங்களை விரிவாக வற்புறுத்தினர். அவற்றுள் தலை சிறந்ததும் அடிப்படையானதும் ஆன குரு பக்தியை—குருவின் திருவுருவத்தை உயிருள்ள தெய்வ சந்நிதியென உணர்ந்து வழிபட்டு அவர்க்குத் தொண்டு புரிந்த மாண்பை—மூன்று நான்கு உதாரணங்களால் விளக்கினர். மெய்யுணர்ந்த பெரியாருடைய செயல்களை யுக்தியால் அறியவொண்ணாது என்றும், ஞானக் காட்சிக்கே அவை தெளிவாகப் புலப்படும் என்றும், காளிதாசன் ஷேக்ஸ்பியர் இருவருடைய நூல்களிலுள்ள மேற்கோள்களின் மூலம் எடுத்துக் காட்டினர். பின் சுவாமிகளின் அஞ்சாத தீரத்தையும் நெஞ்சுறுதியையும் சிறையிருந்த சீதாதேவியின் துணிவோடு ஒப்பிட்டு, பிரம்மஞானிகள் அச்சமறியாத நிலையில் வாழ்வார் என்றனர்; இதற்கு எடுத்துக் காட்டாக சுவாமிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளிற் சில வற்றைக் குறிப்பிட்டார். பெரியோர்களின் வாழ்க்கைகள் பொதுவாக விலைமதிக்க வொண்ணா அருமா மணிகளைத் தம்மகத்தே ஆழத்து மறைத்து வைத்திருக்கும் கடலனைய என்றும், அவற்றைப் பெற விழைவார் அக்கடலிலே ஆழ்ந்து மூழ்கித் தேடிப் பெறல் வேண்டும் என்றும் முடித்தார். இறுதியில் சுவாமிகளின் மீது தாம் பாடிய வடமொழித் துதிக்கவி ஒன்றைக் கூறி, சுவாமிகள் தமது பெயர்க்கியைய, விண்ணிலுள்ள சசியை (சந்திரனை)ப் பலவாற்றானும் விஞ்சியவராய், ஓர் அபூர்வ சசியாக மண்ணில் விளங்கினர் என்று முடித்தார். பின்னர் நன்றியுரையோடு பொதுக்கூட்டம் இனிது முடிந்தது.